விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 02 புதன்கிழமை (19.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கு மற்றொரு சிக்கல்

# களநிலைமைகளை அறிக்கையாக்கி விரைவில் வெளியிடுகிறது நோர்வே

(ஒஸ்லோ) இலங்கையின் அமைதி முயற்சியில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் போருக்கான காரணங்களை விளக்கி நோர்வே அரசு, அவற்றை விசேட அறிக்கையாக வெளியிடவுள்ளது. அதனை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்காக நோர்வே அரசுடன் இலங்கை அரசு இராஜதந்திர மட்டத்திலான காய்நகர்த்தல்களை முன்னெடுத்துள்ளது எனத் தெரியவருகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி.சலுகை 2013 வரை நீடிப்பு

2010ஆம் ஆண்டு இறுதி முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்காவின் ஜி.எஸ்.பி.திட்டம் 2013ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு அமைச்சின் கீழுள்ள வர்த்தகத் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதற்கான அங்கீகாரம் வழங்கும் பிரேரணையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா விரைவில் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அத்திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை (20ஆம் பக்கம் பார்க்க)

## வாசுதேவவிடம் விசாரணை

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலைச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் வாசுதேவநாணயக்காரவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இன்று வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்யவுள்ளதாகத் தெரியவருகின்றது.



பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர (20ஆம் பக்கம் பார்க்க)

## கியூபா – இலங்கை உறவு நெருக்கமடைந்து வருகிறது

### கியூபா தூதுவர் தெரிவிப்பு

கடந்த சில வருடங்களில் இலங்கைக்கும் கியூபாவிற்கும் இடையிலான உறவு நெருக்கமடைந்துள்ளது என இலங்கைக்கான கியூப தூதுவர் நிர்ஸியா குவேரா நேற்றுத் தெரிவித்தார்.

இந்த உறவின் மூலம் இரு நாடுகளுக்குமிடையில் பாரிய அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள கியூப தூதுவராலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவினால் கியூபாவிற்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதார, வர்த்தக மற்றும் நிதித் தடைகளை நீக்குவதற்கான பிரேரணை ஒன்றினை எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் பொதுக் கூட்டத்தில கியூபா சமர்ப்பிக்கவுள்ளதாக (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று மட்டு. விஜயம்

மட்டக்களப்பு ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ' இன்று புதன்கிழமை மக்களிடம் கையளிக்கவுள்ளார்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பின் பேரில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி, வவுணதீவில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களையும் பார்வையிட (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு நோபல் பரிசு வழங்கக் கோரியது அரசு?

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்கியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதற்கு நோபல் பரிசுக் குழுவை பயன்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இத்தகைய சர்வதேச அழுத்தங்களை முறியடித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நற்பெயரை ஏற்படுத்த அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இணையத்தளம் மூலம் முன்வைக்கும் முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இலங்கையில் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தியவர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு 2012-ம் ஆண்டுக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று நோபல் பரிசுக்குழுவிடம் (20ஆம் பக்கம் பார்க்க)

## சமரசிங்கவின் பேச்சால் அழுத நவநீதம்பிள்ளை!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 18-வது அமர்வின்போது இலங்கையின் அறிக்கை காரணமாக மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அழுதார் என தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள்நிபுணர் குழுவின் பரிந்துரைகளை ஐ.நா செயலாளர் மனித உரிமைகள் ஆணையகத்துக்கு அனுப்பினார்.

இதனையடுத்து ஆச்சரியமடைந்த இலங்கைக் குழுவினர் அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் தலைமையில் நவநீதம்பிள்ளையை சந்தித்து நிலைமையை சரிசெய்து கொண்டனர்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முதல் நாளன்று உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க நவநீதம்பிள்ளை ஒரு பக்கச் சார்பாக நடந்து கொள்கிறார் என்று குற்றம் சுமத்தினார்.

இதன்போது, நவநீதம்பிள்ளை, தனது கண்ணை ஒற்றிக் கொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மைத்திரிபால பிரேசில் பயணம்

சுகாதாரத் துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உலக சுகாதார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரேசில் நோக்கிப் பயணமானார்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வரை சுகாதாரம் தொடர்பான சமூக தீர்ப்பு என்று தலைப்பிலான சர்வதேச மாநாட்டில் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார்.

இம்மாநாட்டில் 118 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். சுகாதாரத் துறை தொடர்பான பல சந்திப்புகள் இடம்பெறவுள்ள நிலையில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன (20ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் தமிழர்களின் முதலீட்டை எதிர்பார்த்த லியம் பொக்ஸ்

### பி.பி.சி.சிங்கள சேவை விபரிப்பு



பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சராக இருந்து தற்போது பதவி விலகிய லியம் பொக்ஸ், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆர்வம் காட்ட வில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரித்தானியக் கிளையின் முன்னாள் தலைவர் கலாநிதி ரோஜர் சிறிவாசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேவேளை, பிரித்தானியாவில் வாழ்கின்ற ஈழத் தமிழ் செல்வந்தர்கள் ஊடாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முடியுமா என லியம் பொக்ஸ் ஆராய்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

தனது அதிகாரபூர்வமான கடமைகளில் தன்னுடைய நெருங்கிய நண்பரான அடம் வெரிட்டியை தலையிட அனுமதித்தார் என்ற குற்றச்சாட்டுக்களை அடுத்து பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லியம் பொக்ஸ் கடந்த வாரம் பதவி விலகியிருந்தார்.

இந்நிலையிலேயே லியம் பொக்ஸ் மீது கலாநிதி ரோஜர் சிறிவாசன் குற்றம் சுமத்தியுள்ளதாக பி.பி.சி. சிங்கள செய்தி சேவை தெரிவித்துள்ளது. இது குறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2007-2009 ஆம் (20ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கின் அரச நிர்வாகங்களுக்கு தென்பகுதியை சேர்ந்தோர் நியமனம்

(கொழும்பு)

வட மாகாணத்திலுள்ள அரச திணைக் களங்கள், மருத்துவமனைகள் உட்பட்ட அரச நிர்வாகங்களின் கீழுள்ள கட்டமைப்புப் பணி களுக்குச் சிங்களவர்களை ஈடுபடுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனொரு கட்டமாக மன்னார் மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் அங்கிருந்து அகற்றப்பட்டு மன்னார் மாவட்ட அரச அதி பராக தென்பகுதியைச் சேர்ந்த ஒருவர் நியமிக் கப்படவுள்ளதாகத் தகவல் ஒன்று வெளியாகி யிருக்கின்றது.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பொதுநிர்வாக சேவைகள் அமைச் சினால் நடத்தப்பட்ட நிர்வாக சேவை உத்தி யோகத்தர்கள் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட சிங்களவர்களைப் பணிக்கென வடக்கு மாவட்டங்களுக்கு அனுப்பும் நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் வவுனியா அரச திணைக்களங்களுக்கு மூவர் உயர்பதவி களுக்காக அனுப்பப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது. இவ்வாறு அனுப்பப்படுபவர் களில் பெரும்பாலானவர்கள் பெண்களாவர்.

நிர்வாக சேவைகள் உத்தியோகத்தர்களுக் கான போட்டிப் பரீட்சையில் தோற்றிய தமிழ் மாணவர்கள் எவரும் சித்தியடையாத நிலை யில் 125 சிங்களவர்கள் தெரிவாகியிருந்த னர்.

குறித்த பரீட்சையினை மீண்டும் நடத்து மாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொது நிர்வாக அலுவல் கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, விரை வில் பரீட்சையினை நடத்தப்போவதாக வாக் குறுதி அளித்திருந்தபோதிலும் குறித்த பரீட்சை இதுவரை நடைபெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியா பொது மருத்து வமனைக்குப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 18 சிற்றூழியர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர்.

இவர்கள் குருநாகல், மாத்தறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என மருத்து வமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கடமை யாற்றி வருகின்ற வவுனியா மாவட்டப் பெண் சிற்றூழியர்களுக்கான நியமனங்கள் வழங் கப்படாத நிலையில் சிங்களவர்களுக்குப் புதிதாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தாகக் கூறப்பட்டது. (எ-8)

## உயர்தர மாணவர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியின் கணித, விஞ்ஞான, வர்த்தக மற்றும் கலைப்பிரிவு மாணவர்களினால் நடத்தப்படவுள்ள உயர் தர மாணவர் தினம் – 2011 இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்வில் விஞ்ஞான, வர்த்தக, கலைப் பாடவிதானங் களுக்குட்பட்ட கண்காட்சி இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து விஞ்ஞான, கணித மாணவர்களினால் "அறிவியல் அருவி" என்ற சஞ்சிகையும் வர்த்தகப் பிரிவு மாணவர் களால் "மின்னல்", "வணிகதீபம்" ஆகிய இரு சஞ்சிகைகளும் கலைப் பிரிவு மாணவர் களால் "கலை விழுது" என்ற சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளன.

அத்துடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறு மெனக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந் திரன் அறிவித்துள்ளார். (எ-12)

## ஒரு சிப்பாய்க்காக 477 கைதிகள் விடுதலை

(இஸ்ரேல்)

பலஸ்தீனியர்களால் கைது செய்யப்பட் டுள்ள இஸ்ரேலிய இராணுவச் சிப்பாய் ஒருவரை விடுவித்துக்கொள்வதற்காகத் தன்னிடமிருந்த 477 பலஸ்தீனியக் கைதி களை விடுவித்து, பலஸ்தீனத்திற்கு அனுப் பும் நடவடிக்கைகளை இஸ்ரேல் நேற்றுக் காலை ஆரம்பித்தது.

பலஸ்தீனியக் கைதிகளை ஏற்றிய முதலா வது வாகனத் தொடரணி நேற்று இஸ்ரேலி லிருந்து பலஸ்தீனத்தின் மேற்குக் கரையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. இவ்வாகனத் தொடரணியில் விடுதலை செய்யப்பட்ட 96 பலஸ்தீனக் கைதிகள் உள்ளனர்.

அவர்களைத் தொடர்ந்து மேலும் 3 வாகனத் தொடரணிகள் இஸ்ரேல் – காஸா எல்லையிலுள்ள கரீம் ஷாலோம் எனும் இஸ்ரேலிய இராணுவ முகாமை நோக்கிச் செல்லவுள்ளன. நேற்று செவ்வாய்க்கிழமை மொத்தமாக 477 பலஸ்தீனக் கைதிகள் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய அரசாங்கத்திற்கும் அதன் பரம எதிரியான ஹமாஸின் ஆளுகைக் குட்பட்ட காஸா பிராந்திய நிர்வாகத்திற்கும் இடையிலான இணக்கப்பாட்டின்படி இப்பலஸ் தீனக் கைதிகளுக்குப் பதிலாக இஸ்ரேலியச் சிப்பாயான கிலாட் ஷாலிட்டை ஹமாஸ் விடுதலை செய்யும். இஸ்ரேலிய அரசினால் தனியொரு நபருக்காகச் செலுத்தப்படும் மிகப்பெரும் விலையாக மேற்படி 477 கைதிகளின் விடுதலை கருதப்படுகின்றது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை குற்றவாளி களாகக் காணப்பட்ட பெரும் எண்ணிக்கை யிலான பலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்படுவதை அந்நாட்டில் சிலர் எதிர்த் தாலும் கிலாட் ஷாலிட் மீண்டும் இஸ்ரேலுக் குத் திரும்பி வருவது உணர்வுபூர்வமாக உள்ளது. ஏனெனில் கடந்த 26 வருடகாலத் தில் பலஸ்தீனியர்களால் கைது செய்யப்பட்ட இஸ்ரேலியச் சிப்பாய் ஒருவர் உயிருடன் திரும்பி வருவது இதுவே முதற்தடவையாகும்.

கிலாட் ஷாலிட் 2006.06.25ஆம் திகதி காஸா எல்லையில் வைத்து ஹமாஸ் உட்பட காஸாவைத் தளமாகக் கொண்ட ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டார். அப்போது அவர் 19 வயதான இராணுவக் கோப்ரலாக விருந்தார்.

இதேவேளை இஸ்ரேலினால் விடுவிக் கப்படும் பலஸ்தீனியக் கைதிகள் பலரும் எகிப்தினூடாக துருக்கி, சிரியா, கட்டார் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்படவுள்ளனர். இதற் காக கெய்ரோ விமான நிலையத்தில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. (எ-8)

## பட்டமளிப்பு அங்கிகளை பெற்றுக் கொள்ளலாம்

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் எச்.என்.டீ.ஏ., எச்.என். டீ.எம்., எச்.என்.டீ.ஈ., எச்.என்.டீ.ஐ.ரி, எச். என்.டீ.பி.எஸ் ஆகிய கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆந்திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் பங்குகொள்ள வுள்ள மாணவர்கள் தங்களுக்குரிய அங்கி களை நாளை 20ஆம் திகதிக்கு முதல் யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அத்தோடு எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆந் திகதிக்கு முன்னர் மீள ஒப்படைத்தல் வேண் டும் எனவும் யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப வியல் நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் வி. எஸ்.விஜயநாதன் தெரிவித்துள்ளார். (எ-12)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி யின் இந்து மன்றத்தினால் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனை கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் 21ஆந்திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோக நாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ் வில் சமயத்தலைவர்கள், கல்விமான்கள், சமூகப் பெரியார்கள் வாழ்த்துரை வழங்கவுள்ள னர்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கல்லூரி இந்து மன்றத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (ச)

## தடைமருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

நெருப்புக்காய்ச்சலுக்கு எதிரான தடை மருந்து ஏற்றும் நிகழ்வு பசார்-1 பொதுச் சுகா தார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட ஆஸ்பத்திரி வீதி இல.584 லௌசியா ஹோட்டலில் இன்று காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை பொதுச் சுகாதார பரிசோதகர் கு.ஆறு முகதாசனின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற வுள்ளது. பசார்-1 பிரிவுக்குட்பட்ட உணவகங் களில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவருக் கும் இத்தடைமருந்தை தவறாது ஏற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## கொழும்பில் எந்தவொரு வீட்டையும் அகற்ற இடமளிக்க மாட்டோம்-ரணில்

கொழும்பு வாழ் மக்களை மையப்படுத் தியதான கொழும்பு மாநகர சபையின் ஐக் கியத் தேசியக்கட்சியின் நிர்வாகம் இங்குள்ள அனைத்து மக்களினதும் பாதுகாப்பினை யும் உரிமையினையும் உறுதிப்படுத்துவதற்கு உறுதி பூண்டிருக்கிறது.

அத்துடன் குறைந்த வருமானம் பெறு வோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வது பிரதான பணியாகும். இதற்கு சகலரின தும் ஒத்துழைப்பும் மிகமிக அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி உறுதியளித்தது போல் கொழும்பில் எந்தவொரு வீடும் உடைத்து அப்புறப்படுத்துவதற்கு ஒரு போதும் இடமளிக் கப்போவதில்லை.

இதனை நிலைப்படுத்துவதற்கு கொழும்பு மாநகரசபையின் அனைத்து உறுப்பினர் களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். (ச-8)

## காசோலைகளை பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆர்.சிவமலர், என்.ரமணன், எம்.மீரா, ஏ.சுதாகரன், யு.ரமேஷ் ஆகியோரது பரீட்சைக் கட மைக்கான காசோலைகள் கிடைக்கப் பெற்று[illegible]ாகவும், உ[illegible]வர்கள் யாழ். கல்வி வலயத்தி[illegible]ற் பிரிவுடன் உ[illegible] னடியாகத் தொடர்புகொள்[illegible]மாறு [illegible]கட் கப்பட்டுள்ளது. (ந)





### வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

தீபாவளியை முன்னிட்டு

01.10.2011 – 31.10.2011 வரை சிறப்பு சலுகை கட்டணம்.

- ✓ கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- ✓ எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

- ✸ பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்படும்
- ✸ ஏற்கனவே பொதிகளை அனுப்பிய பற்று சீட்டை கொண்டு வரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சலுகை

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

**Arrul Global Express**

International Courier & Cargo Service

T.P : 021 222 6113

இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் குடும்பம் 1983 இல் பிறந்த 6 அடி உயர முள்ள பூரம் 32 1/4 பாவமுடைய BSc. Engineering (பேராதெனியா) MSc. Engineering UK (Engineer UK Work Permit) மணமகனிற்கு படித்த, நற்குணமுள்ள அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க் கின்றனர்.

தொடர்பு: 0789144469

(6-4763)

### தவறவிடப்பட்டுள்ளது

கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி நிர்மலாதேவி அருள்நேசன் என்பவருடைய தே.அ.அட்டை (588172953V) 17.10.2011 யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குமிடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆலடி ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
T.P.:- 0776154249

(6633)

### புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்

நான் தயாரித்து வெளியிட்ட வாழ் வாங்கு வாழ்வியல் தேவாரத் திரட்டு, மதமாற்றம், வேறு 25 வகையான கை நூல்கள் சைவ நூல் நிலையங்களுக் கும், பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்க விரும்புகிறேன்.

தொடர்பு: - க.மகேசன்
இல. 6, இராணி வீதி, நல்லூர்.
T.P.: 0212221652, 0212221651

## இன்று ஒரு தகவல்

# வாயை மூடுங்கள்...!

ஒரு பாடசாலையில் ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுக்கு பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார்.

மேசையின் மீது மூன்று குரங்குப் பொம்மைகள் வைக்கப் பட்டிருந்தன.

"மாணவர்களே! இந்தப் பொம்மைகளைக் கவனியுங்கள். இவை என்ன?"

"குரங்கு பொம்மைகள்!"

"இந்தப் பொம்மைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?"

"ஒரு பொம்மை கண்ணை மூடிக் கொண்டிருக்கிறது. இரண்டாவது பொம்மை காதை மூடிக் கொண்டிருக்கிறது. மூன்றாவது பொம்மை வாயை மூடிக்கொண்டிருக்கிறது" என்றார்கள்.

சிறிது விபரமாகச் சொல்லுங்கள் என்று மாணவர்கள் கேட்டார்கள்.

ஒரு குரங்கு தன் இரு கைகளாலும் இரு கண்களை மூடிக் கொண்டிருக்கிறது.

இன்னொன்று தன் இரண்டு கைகளாலும் இரண்டு காதுகளையும் மூடிக் கொண்டிருக்கிறது.

இன்னொன்று அதேபோல வாயை மூடிக்கொண்டிருக்கிறது.

"சரி... இப்போது சொல்லுங்கள்... இதற்கு என்ன அர்த்தம்?

"தீயவற்றைப் பார்க்காதே... தீயவற்றைக் கேட்காதே... தீயவற்றைப் பேசாதே!"

"சரி... இன்னொரு முக்கியமான கேள்வி. ஒரு வாயை எதற்காக இரண்டு கைகளாலும் மூடவேண்டும்? ஒரு கையே போதுமே...?"

மாணவர்களிடமிருந்து இந்தக் கேள்விக்குப் பதில் ஏதுமே வரவில்லை.

ஆசிரியர் விளக்கினார். "மாணவர்களே! கண்களுக்குப் பார்ப்பது மட்டுமே வேலை. காதுகளுக்குக் கேட்பது மட்டுமே வேலை. ஆனால், வாய்க்கு மட்டுமே இரண்டு வேலைகள் ஒன்று சாப்பிடும் வேலை. மற்றையது பேசுகிற வேலை. இவை இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பதை உணர்த்துவதற்காகவே ஒரு வாயை இரண்டு கைகளால் மூடுகிறோம்.

மாணவர்கள் முகத்தில் தெளிவு பிறந்தது. உடனே ஆசிரியர் இன்னொரு கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி இருந்தார்.

அவருடைய வீட்டிலே எலித் தொல்லை அதிகமாக இருந்தது. ஊரிலே திருடர்கள் தொல்லை அதிகமாக இருந்தது. அதனால் எலிகளை விரட்டுவதற்கு ஒரு பூனையை வளர்த்தார்.

திருடர்களை விரட்டுவதற்காக ஒரு நாயை வளர்த்தார்.

அந்தப் பூனை வீட்டைச் சுற்றி சுற்றி இரவு பகலாக கத்துவதால் எலித் தொல்லை ஒழிந்து விட்டது.

ஆனால் இன்னொரு தொல்லை ஆரம்பித்தது.

இந்தப் பூனையின் சத்தம் விவசாயியின் தூக்கத்தைக் கலைத்தது. ஒருநாள் நடுராத்திரியிலே இந்தப் பூனை சத்தம் போட்டுக் கத்தியது. விவசாயிக்கு தூக்கம் கலைந்துவிட்டது.

ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு அந்தப் பூனையின் அருகில் சென்றார்.

"இனிமேல் வாயைத் திறந்தால் தொலைச்சிப்புடுவன்..." என்று மிரட்டி விட்டு தூங்கச் சென்றுவிட்டார்.

அந்தப் பூனை அடி வாங்குவதை அங்கேயிருந்த நாய் பார்த்துக் கொண்டே இருந்தது! அதற்கு உடம்பு நடுங்க ஆரம்பித்தது.

"சத்தம் போட்டால் நமக்கு இது மாதிரிதான் அடி விழும் போல இருக்கிறது... இனிமேல் வாயைத் திறக்காமலே இருக்கிறதுதான் உத்தமம்...! என்று தன்னகத்தே நினைத்துக் கொண்டது.

அன்று இரவு திருடர்கள் திருடுவதற்காக வீட்டினுள் நுழைந்து விட்டார்கள். வீட்டில் இருந்தவற்றையெல்லாம் கொள்ளைக் கும்பல் சூறையாடி விட்டுச் சென்று விட்டது.

இந்த நாய் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு தான் இருந்தது. ஆனால், வாயைத் திறக்கவில்லை.

விடிந்ததும் விவசாயி எழுந்தான். வீட்டிலே திருடர்கள் திருடியது அவனுக்குப் புரிந்தது

பூனையை அடித்த குச்சியை கையிலே எடுத்தார். நேராக அந்த நாயிடம் சென்றார்.

"இராத்திரி முழுவதும் வாயை மூடிக்கொண்டு வேடிக்கையாக பார்த்துக் கொண்டு இருந்தாய்? திருடனைப் பார்த்து குரைக்காத நீயும் ஒரு நாயா...?" என்று கூறிவிட்டு அடி அடியென்று நாயை அடித்தார். அது அடியை வாங்கிக்கொண்டு கொல்லைப்பக்கமாக ஓடியது.

அதன்பின்பு அது தனது மனதினுள் நினைத்தது "சே! என்ன மோசமான மனிதர்கள்... வாயைத் திறந்து கத்தினாலும் அடிக்கிறாங்க... வாயை மூடிக் கொண்டாலும் அடிக்கிறாங்க...

யார் வாயைத் திறக்க வேண்டும்... யார் அமைதி காக்க வேண்டும் என்பது அந்த நாய்க்கு விளங்கவில்லை.

ஒரு பேச்சுவார்த்தை நடக்கும் போது யார் பேச வேண்டும் என்பது முக்கியம். யார் பேசாமல் இருக்க வேண்டும் என்பது அதை விட முக்கியம். அதேபோல சும்மா இருக்க வேண்டிய நேரத்தில் பேசுவதும் தவறு. பேசவேண்டிய நேரத்தில் சும்மா இருப்பதும் தவறு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொடர்ச்சியான பருவ மழையால் இடம்பெயர்ந்த மக்கள் அவலம்

(மல்லாவி)

மல்லாவி உட்பட வன்னியில் தொடர்ச்சியான மழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வன்னியில் நடைபெற்ற யுத்தம் காரணமாக 90 வீதமான பொது மக்களின் நிரந்தர வீடுகள் அழிவடைந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு பிற்பகுதி தொடக்கம் மக்கள் நலன்புரி முகாம்களில் இருந்து படிப்படியாக குடியமர்த்தப்பட்டனர்.

இவர்கள் மீள் குடியேறிய போது 12 கூரைத் தகடுகளும் 8 மரத்தடிகளும் ஒரு கூரைவிரிப்புமே பலருக்கு வழங்கப்பட்டது.

ஒரு சிலருக்கு மட்டும் இடம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்) 6 மாதங்கள் மட்டுமே பாவனைக்குரிய தற்காலிக வீடுகளை அமைத்து கொடுத்து அவை இன்றுவரை பாவனையில் இருப்பதன் காரணமாக கூரை மரங்கள் பழுதடைந்த நிலையில் மழைக்கு தாக்குப் பிடிக்க முடியாது பழுதடைந்துவிட்டன.

இதைவிட அண்மையில் சிறுபோக செய்கைமூலம் அறுவடை செய்த நெல் மூடைகளும் இவ்வீடுகளிலும் தற்காலிக கொட்டகைகளிலும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவையும் மழைநீரால் நனைந்துள்ளன.

இதனால் விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதோடு வாழ்விடமும் இல்லாது மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர்.

இந்நிலையில் இந்திய வீட்டுத்திட்டம் தரப்படுமென எதிர்பார்த்த மக்களுக்கு அதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இம் மக்களின் அவல நிலையை கருத்திற் கொண்டு அரச, அரச சார்பற்ற பொது அமைப்புக்கள் உதவி செய்ய வேண்டுமென இம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(4-3-15)

# இளையோருக்கு சுய தொழில் ஊக்குவிப்பு கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் நிஸ்கோ பிரிவினரால் யாழில் வசிக்கின்ற 30 வயதிற்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளின் சுயதொழில் ஊக்குவிக்கும் நோக்குடன் அரச வங்கியினூடாக கடன் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது..

இதில் பயனாளி ஒவ்வொருவருக்கும் ஆகக்கூடிய கடன் இரண்டரை இலட்சம் வழங்கப்படுகின்றது.

அத்தோடு இக் கடன் பெற விரும்பும் இளைஞர் யுவதிகள் தாம் மேற்கொள்ள விரும்பும் சுயதொழில் சார்பான பயிற்சியை தொழில் பயிற்சி அதிகாரசபை, தொழில் நுட்பக் கல்லூரி, தேசிய தொழில் பயிலுநர் சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் பயிற்சியினை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்தோடு மேலும் விண்ணப்பிக்க விரும்பும் பயனாளிகள் தங்கள் விலாசமிட்டு, 5 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டிய கடித உறையினை இன்னொரு கடித உறையினுள் வைத்து ப.பஞ்சலிங்கம், பொதுமுகாமையாளர் (நிஸ்கோ), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புக்கட்டடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி கடனைப் பெற்றுக் கொள்ளவும். (4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 50 | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 25-20 | 30 | 30 |
| கோவா | 30 | 50 | 30 |
| கரட் | 65 | 120. | 50 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 50 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 50 | 75 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40-50 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 60 |
| பயற்றங்காய் | 70 | 100 | 60 |
| லீக்ஸ் | 35 | 40 | 40 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | -- | 60 | 60 |
| முருங்கைக்காய் | 30 | 90 | 50 |
| போஞ்சி | -- | 110 | 60 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 10-12 | 15 | 10 |
| தேசிக்காய் | 280-300 | 250 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

## இராசி பலன்

19.10.2011
(ஐப்பசி 02, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சப்தமி பிற்பகல் 4.19 மணிவரை
திருவாதிரை காலை 6.40 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
அட்டமி-நவமி

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், இழுபறியாக இருந்த காரியங்கள் கைகூடும், தொழில் வளர்ச்சி அதிகரிக்க தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவுவர்.

**இடபம்** புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆனந்தமான நாள், வருமானம் திருப்தி தரும், வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறும், கொடுத்த வாக்கை காப்பாற்ற கொள்கையைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வீர்கள்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது.

**சிங்கம்** சிறப்பான நாள், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், அந்நிய தேச தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சியை வழங்கும், குடும்பத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் தோன்றும்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்கள் கை கூடும், தூரதேசச் செய்திகள் வந்து சேரும் நாள்.

**துலாம்** தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறும், புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** உடல் நலனில் கூடிய அக்கறை கொள்ள வேண்டிய நாள், பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு கிட்டும், கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உடல் நலம் சீராகும்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடையும் நாள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, கடிதம் கனிந்த தகவலைத் தரும், வியாபார விருத்தியுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** வாகன சுகத்தால் வளம் காணும் நாள், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள்.

வளவன்

# பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்கு இரண்டு தங்கங்கள்


தவராசா அருந்துஷா


ஐங்கரதாஸ் சந்திரிக்கா

யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இரு மாணவிகள் மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பு ரேஸ்ரன் கல்லூரியில் நடைபெறவுள்ள ஆங்கிலதின போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

இவ்வாண்டு நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டியில் தரம் 13 இல் கல்வி கற்கும் தவராசா அருந்துஷா கட்டுரைப் ஆக்கப் போட்டியில் பங்குபற்றி தங்கக் பதக்கத்தையும் தரம் 12 இல் கல்வி கற்கும் ஐங்கரதாஸ் சந்திரிக்கா பார்த்தெழுதல் போட்டியில் பங்கு பற்றி தங்கப் பத்க்கத்தையும் பெற்று தேசிய மட்ட போட்டியில் பங்கு பற்றவுள்ளனர். (4-3-24)

# சுண்டிக்குள பிரதேசத்தில் பொருட்களை தேடவுள்ள மக்களுக்கான அறிவித்தல்

சுண்டிக்குளம் பிரதேசத்தில் யுத்தத்தின் போது கைவிட்டுச் சென்ற படகு, இயந்திரம் மற்றும் வலைத் தொகுதி ஆகியவற்றை தேடுதல் செய்வதற்கு கட்டைக்காடு சிவில் இராணுவத்தினரால் மக்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இச் சுண்டிக்குள பிரதேசத்திற்கு மக்கள் நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு கைவிடப்பட்ட பொருட்களினை தேடுவதற்காக சிவில் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

எனவே இவ் வாய்ப்பை பயன்படுத்தி உரியவர்கள் உரிய நேரத்திற்கு வருகை தந்து பயனடையுமாறு இராணுவத்தினரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அங்கு செல்பவர்கள் தமக்குத் தேவையான குடிநீர், உணவு மற்றும் நிலத்தில் புதைக்கப்பட்ட பொருட்களாயின் அவற்றை தோண்டுவதற்கான மண்வெட்டி மற்றும் செல்வதற்கு வாகனங்கள் என்பவற்றை உரியவர்கள் ஒழுங்குபடுத்துமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளனர். (4-3-64)

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

அரசடி சந்திக்கும் நீராவியடி சந்திக்கும் இடையில் உள்ள வீதியில் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப் பணத்திற்குரியவர் அலுவலக வேலை நாட்களில் தகுந்த ஆதாரங்களை சமர்ப்பித்து பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளுமாறு நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். (4-12)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகத்தின் பெண்களுக்கான அணிக்கு 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியைச் சேர்ந்த பதிவு செய்த விளையாட்டுக் கழகங்கள் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொண்டு போட்டியில் பங்கு பற்றுமாறு யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

* * * * * *

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தினரால் வடமராட்சிக்குட்பட்ட40 கழகங்கள் பங்குபற்றும் அணிக்கு 20 இற்கு 20 கிரிக்கெட் போட்டி இன்று புதன்கிழமை மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் புற்றளை அணியை எதிர்த்து கரவெட்டி கே.எஸ்.சி. விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (4-3-24)

# கல்வயல் விவசாய சம்மேளனத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு கடன் உதவி

(கல்வயல்)

கல்வயல் விவசாய சம்மேளத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு 2011-2012 இற்கான நெற் செய்கை கடன் 35 ஆயிரம் ரூபா முதல் ஒரு இலட்சம் ரூபா வரை வழங்கப்படவுள்ளது என கல்வயல் விவசாய சம்மேளன செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி கடன்நிதியை சாவகச்சேரி கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் ஜெகதீஸ்வரியின் அனுசரணையுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் சேதுகாவலர் தலைமையில் வழங்கப்படவுள்ளது.

இக்கடன் நிதியானது 120 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. (4-3-31)

# யாழ்.மாவட்டத்தில் காணிப் பயன்பாட்டு வரைபடம் தயாரிக்கும் பணி துரிதகதியில்

(நல்லூர்)

யாழ்.மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகத்தினால் யாழ்ப்பாண மாவட்ட காணிப் பயன்பாட்டு வரைபடம் தயாரிக்கும் பணி துரிதக்தியில் இடம் பெற்று வருகின்றது.

இதற்காக கிராமசேவையாளர் ரீதியாக காணிப் பயன்பாடு சம்பந்தமான தகவல்களை சேகரிக்கும் பணியில் பிரதேச காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் இது சம்பந்தமான பயிற்சிகளுக்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் கடந்த யுத்த சூழ்நிலைகள் காரணமாக வடக்கு-கிழக்கு பகுதியில் காணிப் பயன்பாடு சம்பந்தமான பணிகள் இடம் பெறாதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(4-3-134)

## நிர்வாகத் தெரிவு

(நல்லூர்)

உரும்பிராய் வடக்கு இருளன் கிராம அபிவிருத்தி அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் தலைவராக திருமதி மரியசிறானி பேவி, செயலாளராக செல்வரத்தினம் சுவர்னா, பொருளாளராக க.மதிவதனி, உப தலைவராக க.அருந்தவராசா, உப செயலாளராக மனோகரன் நிக்சலா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தோடு நிர்வாக உறுப்பினர்களாக 8 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-3-134)

## கதை சொல்லும் நிகழ்வு

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தினரால் முன்பள்ளி மாணவர்களிடையே கதை சொல்லும் நிகழ்வு இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம், தோமஸ் முன்பள்ளி, கலைமகள் முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளில் நடைபெறவுள்ளது.(4-3-29)




## இலவச மருத்துவ முகாம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணி கடற்படையின் அனுசரணையுடன் சிறப்பு மருத்துவ முகாம் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு வெற்றிலைக் கேணி றம்போ விளையாட்டுக் கழக மைதானத்திற்கு அருகாமையிலுள்ள மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் சிறப்பு மருத்துவ குழு கலந்து கொள்ளவுள்ளது. எனவே இதில் கலந்து பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-3-64)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தக கண்காட்சி

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கருத்தரங்கும் புத்தக கண்காட்சியும் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா, சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பிரதேச செயலர் வீ.வீரபத்திரப்பிள்ளை, பண்டிதர் பொன்.சுகந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகர் திருமதி ப.யோகராசா, ஓய்வு பெற்ற அஞ்சல் பாடசாலை அதிபர் ஞா.சண்முகநாதன், புலோலி வணிக சங்கம் வ.செல்வராசா, எஸ்.கணபதிப்பிள்ளை, புலோலி கமநல விரிவாக்கல் சேவை உத்தியோகத்தர் செல்வி சுதாயினி கனகலிங்கம், அ.அரியரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். அத்தோடு தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசு வழங்கலும் புத்தகக் கண்காட்சியும் இடம்பெறும். (4-12-35)

## மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப்பிரிவு பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர் க.சண்முகலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4-3-29)








யா/செங்குந்தா இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இ.பாலகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்படுவதையும் மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் அதிபர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் 3 நபர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளாகக்கண்டு மூன்று நபர்களுக்கும் 5 வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென உத்தரவிட்டார். (4-3-24)

---

மதுபோதையில் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (4-3-24-29)

---

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் இன்றி கட்டுத்துவக்கு வைத்திருந்தமை, மானைக்கொன்றமை, 40 கிலோ மான் இறைச்சியை வைத்திருந்தமை ஆகிய 3 குற்றச்சாட்டுக்களின் பேரில் இருநபர்கள் பூநகரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளாகக்கண்டு இருவருக்கும் 26 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவரின் 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் கடதாசி, பொலித்தீன் ஆகிய குப்பைகளை போட்ட குற்றச்சாட்டின் பேரில் 3 நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளாக்கண்டு முறையே ஆயிரம், ஆயிரத்து 500, இரண்டாயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவரின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

---

(கரவெட்டி)

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி லொறி செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசாராசா குறித்தநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக்கண்டு 6 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவரின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3-24-29)

# கோம்பாவில் பகுதியில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து ஆராய்வு

(முல்லைத்தீவு)

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களை குடியேற்றுவதற்கான மீளாய்வுக்கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தலைமையில் நடைபெற்ற இந்த மீளாய்வுக் கூட்டத்தில் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களை குடியேற்றுவதற்காக கோம்பாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினுடைய பணிப்புரைக்கமைய இந்த வருடத்திற்குள் இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் மீள்குடியேற்றப்படுவார்களெனவும் வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலுள்ள 2 ஆயிரத்து 306 குடும்பங்களையும் கூடிய விரைவில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இக் கூட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சர் கூறினார்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்படாதுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களை கோம்பாவில் பகுதியில் குடியேற்றும் நடவடிக்கைக்கமைய அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பார்வையிடவே தான் இங்கு வந்ததாகவும் அமைச்சர் இக்கூட்டத்தில் கூறியதாக மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

கோம்பாவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக வீடுகள், மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள் குறித்து ஆராய்ந்த மீள்குடியேற்ற அமைச்சர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குள் 200 வீடுகள் மற்றும் 200 மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்குமாறு மத்திய பொறியியல் ஆலோசனை சபையிடம் அமைச்சர் கோரியதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பின்னர் கோம்பாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களையும் மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். (4-2)

# 540 மில்லியன் செலவில் அரிப்பு பாலம் புனரமைப்பு

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட தள்ளாடி அரிப்புப் பாலம் அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பான விசேட நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்றது. அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்பாலத்திற்கான புனர்நிர்மாணத்திற்கென அரசாங்கம் 540 மில்லியன் ரூபாவினை செலவு செய்துள்ளது. (4-2)

# தனது நாட்டுக்குள்ளேயே பிரச்சினையை தீர்த்துக்கொள்ள இலங்கை முன்வர வேண்டும்

## அமெரிக்கா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான நடவடிக்கையை தம்மால் எடுக்க முடியும் என இலங்கை அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி ஊடகப் பேச்சாளர் மார்க் டோனர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான நடவடிக்கையை இலங்கை எடுக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சமாதானத்தினை எதிர்பார்க்கும் நாடொன்று தமது நாட்டிற்குள்ளேயே குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு இல்லாவிடின் தாம் பல தடவைகள் குறிப்பிட்டது போன்று அது தொடர்பில் ஆராய்வதற்கு மற்றுமொரு வழிமுறையை பின்பற்றுவது ஊடாக சர்வதேசத்தின் நெருக்கடிகள் அதிகரிக்கும் எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பிலும் ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

அறிக்கை வெளியிடப்படும் வரை அது தொடர்பிலான தீர்மானம் ஒன்றை எடுக்க முடியாது என இதற்குப் பதிலளித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் ஊடகப் பேச்சாளர் மார்க் டோனர் தெரிவித்தார். (4-2)

# புற்றுநோயை குணப்படுத்த மாதுளம்பழம் பயன்படும்

(கொழும்பு)

மாதுளம்பழம் உடல் நலனுக்கு சிறந்தது என்ற பொதுவான கருத்துள்ளது. தற்போது அது சர்வதேச நிவாரணி என விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இங்கிலாந்தில் உள்ள ராணி மார்க்ரெட் பல்கலைக்கழக விஞ்ஞான டாக்டர் எமாட் அல் துஜாலி கூறும் போது மாதுளம்பழம் நோய் தீர்க்கும் இயற்கை மருந்தாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

மாதுளம்பழம் சாப்பிட்டால் புற்றுநோய் குணமாகும் என்றும் அதேநேரத்தில் பாலியல் பிரச்சினைகளையும் இது தீர்க்கும் என்றும் தெரியவந்துள்ளது. தாவரங்களில் பொதுவாகவே புனிகாலஜின்ஸ் என்ற சத்துப்பொருள் உள்ளது. அது மாதுளம்பழத்தில் மிக அதிகமாகவுள்ளது. எனவே, இது அனைத்து நோய்களையும் தீர்க்கும் என்றும் தெரிய வந்துள்ளது என்றும் துஜாலி தெரிவித்தார். (4-2)


# ஏல விற்பனை அறிவித்தல்

## தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 30.09.2010 அன்று அல்லது அதற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஏல விற்பனைத் திகதி:-**
**05.11.2011 (சனிக்கிழமை)**
**காலை 8.30 மணி**

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம் 2ஆம் கிளை, மானிப்பாய், காரைநகர், திருநெல்வேலி, சங்கானை, ஊர்காவற்றுறை. | யாழ்ப்பாணக்கிளை, இல: 496, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2696 |

(க-4762)

ஏல விற்பனை இரத்துச் செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

NSB
National Savings Bank

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு-03.

# படுகொலை செய்யப்பட்டவர்கள் குறித்து பாராளுமன்ற ஒன்றியத்தில் விளக்கப்பட்டது

## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஜெனீவாவில் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான நிலையில் அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட அமைச்சர்கள் பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கிக் கூறியுள்ளனர்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க தலைமையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி ஆகியோர் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, படுகொலைசெய்யப்பட்ட முன்னாள் எம்.பி.க்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் மற்றும் தியாகராஜா மகேஸ்வரன் ஆகியோர் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வின் போது அரசாங்கத்தின் சார்பில் விளக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் எம்.பி. அர்ஜுன் ரணதுங்கவும் ஒன்றியத்தின் அமர்வில் கலந்து கொண்டனர். இந்நிலையில் ஜெனீவா சென்றுள்ள அமைச்சர் சமரசிங்க அங்கிருந்தவாறு கருத்து வெளியிடுகையில், சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின. இதன்போது இலங்கை விடயங்கள் குறித்து எமது பக்க நியாயங்களை எடுத்துரைத்தோம்.

அதாவது நிலைமைகளை அவதானித்து செயற்பட்டு வருகின்றோம். இன்றைய அமர்வில் பிரேரணை முன்கொண்டு வரப்படும். நாளை ஒன்றியத்தின் அமர்வுகள் முடிவுக்கு வரும் என்றார். (4-2)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வித்தகபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் மண்ணின் மகிமை காணிப்பதிவின் ஆரம்ப தகவல் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்வது சம்பந்தமான விளக்க கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கிராமசேவகர் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே இவ்விளக்கக் கருத்தரங்களில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகிறது. (4)

## போதைப்பொருள் வைத்திருந்த நபர் கைது

(கொழும்பு)

வெல்லம்பிட்டிய கொதட்டுவ வீதியினூடாக கல்கொடுவ வீதிக்கு திரும்பும் சந்திக்கு அருகில் 107 கிராம் ஹெரொயினை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 25 வயதான ஒருவரே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (4-2)

# முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் வெலிஓயா பிரதேச செயலகம்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய நிர்வாக மாற்றத்தின்படி வெலிஓயா என்ற மணலாறு பிரதேச செயலகப்பிரிவு அநுராதபுர நிர்வாகத்தில் இருந்து முல்லைத்தீவின் நிர்வாகத்துக்கு கீழ் மாற்றப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகளை மீளமைக்கும் திட்டத்தின் கீழ் இது மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள குடியேற்றவாசிகளைக் கொண்ட வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு போர் காரணமாக அநுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தில் இருந்து வந்தது. தற்போது போர் அற்ற நிலையில் இது முல்லைத்தீவின் நிர்வாகத்துக்குள் மாற்றப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகம் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய மாவட்டங்கள் எவையும் உருவாக்கப்படமாட்டாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் வவுனியாவில் மேலும் இரண்டு புதிய பிரதேச செயலகங்களை ஏற்படுத்துமாறு தாம் கேட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மட்டக்களப்பிலும் இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (4-2)

# அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் போது சீருடை அவசியம்

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் போது பொலிஸார் சீருடைகளை அணிந்திருப்பது அவசியம் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் அதேபோல அரசாங்கம் கட்சியின் சிலரும் இதற்கு ஆட்சேபம் வெளியிட்டுள்ளனர்.

அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸார் சில வேளையில் 15 மணித்தியாலங்கள் கடமைகளில் ஈடுபடுகின்றார்கள்.

சீருடைகளை அணிந்து கொண்டு இத்தனை மணித்தியாலங்கள் பணியாற்றுவது என்பது கடினமானது.

இந்த நிலையில் பொலிஸ் சேவையிலுள்ள ஒருவருக்கு இரண்டு சீருடைகளே வழங்கப்படுகின்றன.

எனவே, அவற்றை அவர்கள் சலவை செய்து மீண்டும் உடுத்துவது என்பது யதார்த்தமற்றது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார். சீருடை அணிவதன் மூலம் அரசியல் கொலைகளை நிறுத்த முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொலநறுவையில் உள்ள அரசாங்க கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் அரசாங்கத்தின் இந்த திட்டத்தை ஆட்சேபித்துள்ளார். (4-2)

# அழகியல் நிலையங்களை பரிசோதிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல அழகியல் நிலையங்களையும் தீவிர பரிசோதனைக்குட்படுத்துவது என்று தேசிய அழகியல் உபரகணம் மற்றும் மருந்து வகைகள் ஒழுங்கமைப்பு அதிகாரி சபை தீர்மானித்துள்ளது.

அதிகாரசபையின் பணிப்பாளர் கலாநிதி ஹேமந்த வெனரஹம கருத்து வெளியிடுகையில், நீர்கொழும்பு அழகியல் நிலையத்தில் ஆசிரியர் ஒருவர் சென்ற வாரம் மரணமடைந்ததை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன அதிகார சபைக்கு விடுத்த பணிப்புரையில் அழகியல் நிலையங்களில் உபயோகிக்கப்படும் உபகரணங்களும் அழகு சாதனங்களும் பதிவு பெற்ற மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களுக்கும் உட்பட்டவையா என்பதை தீர்மானிக்கும்படி கேட்டுள்ளார்.

அதேவேளை, கொழும்பு மாநகரத்தில் உள்ள சகல மருந்து விற்பனை நிலையங்களிலும் அடுத்தவாரம் சோதனை நடவடிக்கைகளை அதிகாரசபைமேற்கொள்ளும். (4)

# சகல பிரஜைகளினதும் தனிப்பட்ட தகவல்களை சேகரிக்க 14.5 மில்லியன்

பாதுகாப்பு அமைச்சினால் நாட்டில் உள்ள சகல பிரஜைகளினதும் தனிப்பட்ட தகவல்களை சேகரிக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 14.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் அனைத்து நபர்களினதும் தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளன.

ஆட்பதிவு திணைக்களம் வழங்கும் அடையாள அட்டைக்கு பதிலாக இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. இந்த இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கப்படவுள்ளமை குறித்து அரசாங்கம் கடந்த ஜூலை மாதம் அறிவித்தது.

இலங்கை ஆட்பதிவுத் திணைக்களம் கடந்த வருடம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-2)





புத்தூர் கிழக்கு மகாத்மாஜி முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் சிறார்களின் அணிவகுப்புடன் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இறைவணக்கம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய காலம்

## அறைகூவல் விடுக்கிறார் வி. ஆனந்தசங்கரி



**(கொழும்பு)**

**முப்பது வருடகால யுத்தத்தில் மடிந்து போனவர்கள் ஒன்றும் பிச்சைக்காரர்கள் அல்ல என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.**

**காணி அபகரிப்பு மற்றும் சிங்களக்குடியேற்றங்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.**

**இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு முதல் நந்திக்கடல்வரை சுமார் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இந்த இடம் விமானப்படைக் குரியது என்று பலகை வைத்துள்ளார்கள். அதைப்பார்த்ததும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதனைவிடவும் சிவசக்தி ஆனந்தன் சொன்ன விடயம் இன்னமும் எனது மனவேதனையை அதிகரித்து விட்டது. இத்தகைய அடாவடித்தனங்களைக் கண்டபின்னரும் எனது உயிர் பிரியமாட்டேன் என்கிறதே என்று எனக்குக் கவலையாக உள்ளது. இன்னும் நான் ஏன் வாழ வேண்டும் என்று கேட்கத்தோன்றுகிறது என்றும் கூறினார்.

அப்போது மேலும் தெரிவித்ததாவது, இன்றைய உண்ணாவிரதம் என்னை 30 வருடங்கள் பின்னோக்கிப் பார்க்க வைக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி சிறிமாவோ அம்மையார் தனிச்சிங்கள சட்டத்தை அமுல்படுத்தியபோது இதே வவுனியா நகரசபை மைதானத்திலே நாங்கள் உண்ணாவிரதம் இருந்தது எனது நினைவுகளுக்கு வருகின்றது.

அன்றும் அரசுக்கு ஆதரவானவர்கள் எமது உண்ணாவிரதத்தைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். எம்மினத்துக்கு அரசாங்கத்துடன் சேர்ந்து எம்மினத்தவர்களே துரோகம் இழைத்த வரலாறுகள் எம்மிடம் நிறையவே உள்ளன. இன்றும்கூட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ள வந்த ஏராளமான மக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆண்டுகால வாழ்க்கையில் எமது மக்கள் இலட்சக்கணக்கில் மடிந்துள்ளனர். இறந்தவர்கள் ஒன்றும் பிச்சைக்காரர்கள் அல்ல. காணிபூமியுடன் வளமாக வாழ்ந்தவர்கள் அவர்களின் வாரிசுகளுக்கு தங்கள் காணி எங்கிருக்கின்றது என்பதே தெரியாது. அத்துடன் யுத்தத்தில் உயிரைக் கையில் பிடித்து ஓடியவர்கள் தங்களது காணி உறுதிகளைத் தொலைத்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் வரவிருக்கின்றனர். அவர்களது காணிகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறது இந்த அரசாங்கம்? இந்த நேரத்தில் இத்தகைய பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

அரசாங்கம் துரிதகதியில் மேற்கொள்ளும் இத்தகைய செயல் தொடருமானால் எமது இனம் இல்லாமலேயே போய்விடும். இவைகளை எல்லாம் சிந்தித்துதான் நாங்கள் அனைவரும் எம்மிடமுள்ள சிறுசிறு வேற்றுமைகளை மறந்து ஓரணியாக அணிதிரண்டு எமது மக்களின் எதிர்ப்பை இன்று அரசாங்கத்திற்குக் காண்பித்திருக்கிறோம்.

இன்று எத்தகைய உயர்பீடத்திலும் தமிழர்கள் இல்லை. முன்பு ஓரளவிற்கு உயர் பதவிகளில் தமிழர்கள் இருந்தார்கள். இன்று இலங்கை பொது நிர்வாகத்திற்கான சோதனையில் ஒரு தமிழரும் சித்தியடையாத நிலை தோன்றியுள்ளது. இந்த நாட்டில் நாம் மனிதர்களாக வாழ்வோமா என்ற சந்தேகம் எனக்குத் தோன்றியுள்ளது. இந்த நாட்டில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று தான் இத்தகைய செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும். எனவே இப்பொழுது நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் நிர்ப்பந்தம். அதனை நாம் திடசங்கற்பமாக ஏற்போம் என்று கூறினார். (4-2)

## சுற்றிவளைப்பில் 132 பேர் கைதாகினர்

(கொழும்பு)

நுகேகொட பிரிவுக்குட்பட்ட அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 132 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 86 பேரும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். அத்துடன் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 26 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு நேற்று முன்தினம் அதிகாலை முதல் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (4-2)

## இந்து தர்மாசிரியர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடத்தப்படுகின்ற இந்து தர்மாசிரியர் பரீட்சை எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளிலும் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

எனவே இப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை அவ்வவ் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டை இதுவரைக்கும் கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் 011-2785230 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாமென பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார். (4-12)

## லியாம் பொக்ஸின் பதவி விலகலுக்கும் பிரி.தமிழர் பேரவைக்கு தொடர்புண்டு

### திவயின தகவல்

(கொழும்பு)

பிரித்தானிய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸை குறித்த பதவியில் இருந்து அகற்றுவதற்காக பிரித்தானிய தமிழர் பேரவை 5 மில்லியன் பவுண் ஒப்பந்தம் ஒன்றை சனல் 4 தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ளது என தெரியவந்துள்ளதாக திவயின கூறியுள்ளது.

லியாம் பொக்ஸ் இலங்கைக்கு ஆதரவானவர் என கூறி பிரித்தானிய தமிழர் பேரவை மேற்கொண்ட நடவடிக்கைக்கு சனல் 4 தொலைக்காட்சியின் செய்தியாளர் ஜொனத்தன் மில்லரை பயன்படுத்தியதாகவும் அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லியாம் பொக்ஸ் இலங்கை இராணுவத்திற்கு ஆயுதங்களை வழங்க உதவியதாக பொய்யான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. லியாம் பொக்ஸ் பதவி விலகுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்த உலக தமிழர் பேரவையின் தலைவர் போதகர் இம்மானுவேல் லியாம் பொக்ஸ்விலக போவதாக தெரிவித்திருந்தார் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (4-2)

## புராதன பொருட்களை திருடிய இராணுவ அதிகாரிக்கு இரு வருட சிறை

(கொழும்பு)

பொல்பித்தகமவிலுள்ள பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதியிடமிருந்து புராதனப் பொருட்களை திருடிய குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட ஓய்வு பெற்ற இராணுவ லெப்டினட் ஒருவருக்கு மாஹோ நீதிவான் நீதிமன்றம் 2 வருட கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

குற்றம் சுமத்தப்பட்ட பி.ஏ. புஷ்பகுமார ஜயவர்த்தன எனும் இந்த இராணுவ லெப்டினண்டுக்கும் 2 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இதற்கு முன்னரும் இதே போன்ற குற்றச்சாட்டுக்களில் இவர் குற்றவாளியாக காணப்பட்டதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பபட்டது.

இவ்விவகாரத்தில் தொடர்பு பட்ட வர்த்தகர் ஆர்.எம்.தனஞ்ஜய என்பவருக்கும் ஆர்.ஜி. சுமித் ஜயசோம என்பவருக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இருவருடகால கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் வர்த்தகர் தனஞ்ஜேயவுக்கு 2 இலட்சம் ரூபா அபராதமும் சுமித் ஜயசோமவுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து மாஹோ மேலதிக நீதிவான் பாரதி விஜேரட்ன தீர்ப்பளித்தார். (எ-9)


## மனை முகாமைத்துவ கண்காட்சி

யாழ்ப்பாணம் கல்வி வலய முறைசா ராக் கல்விப்பிரிவின் அனுசரணையுடன் யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி மனை முகாமைத்துவ பயிற்சி நெறி மாணவர்கள் நடத்தும் மனை முகாமைத்துவக் கண்கா ட்சி இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி பிர தான மண்டபத்தில் இ.இராஜமகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்கள திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் கே.ஜெ.விரட்லி, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.கமலராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு கௌரவ விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் மு.இராசநாயகம், யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் தி.சத்தியபாலன், யாழ். கல்விவலய முறைசாராக் கல்விப்பிரிவின் செயற்றிட்ட உத்தியோகத்தர் சி.சிவானந்தன், யாழ்.கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவின் ஆசிரிய ஆலோசகர் இ.இரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-12)





யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் த.வரதராஜா 33 வருட ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதையொட்டி அவரை பாராட்டும் முகமாக வரத-ம் என்கின்ற நூல் வெளியீடு அண்மையில் நடைபெற்றது. நூலின் வெளியீட்டுரையினை இக் கல்லூரியின் ஆசிரியர் ஞானதிருக்கேதீஸ்வரன் வழங்குவதையும் கல்லூரி மாவணர் ஒருவர் ஆசிரியரை மாலை சூட்டி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# ஈசானிய மூலையை சாஸ்திரப்படி அமைப்பதால் ஏற்படும் நன்மைகள்

மனைமற்றும் கட்டடத்தின் ஈசானிய மூலையிலிருந்து, (வடகிழக்கு மூலை) அகசிவப்பு ஒளிக்கதிர்கள்(Infra Red Rays) அதிக அளவில் ஊடுருவும். அகசிவப்பு ஒளிக்கதிர்கள் மனித உடலுக்கு பல நன்மைகளையும், புறஊதா ஒளிக்கதிர்கள் தீமைகளையும் அளிக்கிறது என்பது மருத்துவ ரீதியாக கண்டறியப்பட்ட உண்மை. இந்த நன்மைகள் நமக்கு சரியான முறையில் வந்தடைவதற்கும், இவற்றின் பலனை மேலும் அதிகப்படுத்துவதற்கும், பின்பற்ற வேண்டிய சாஸ்திர முறைகளை இக்கட்டுரையில் விரிவாகப்பார்க்கலாம்.

***ஈசானிய மூலையை அமைக்கும் முறை***

வடகிழக்கு மூலையிலிருந்து அகசிவப்பு ஒளிக்கதிர்கள் அதிகமாக ஊடுருவும் என்பதாலே மனையின் இம்மூலையை எடை எதுமின்றி காலியாக அமைக்க வேண்டும் என சாஸ்திரம் வலியுறுத்துகிறது. மனையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் அதிக காலியிடமும், தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் குறைந்த காலியிடமும் இருப்பது போல் கட்டடத்தை அமைப்பது அவசியம்.

மனையின் ஈசானிய மூலையை சற்று நீண்டிருப்பது போல் அமைப்பது சிறப்பு. இவ்விடத்தில் மரம், செடி கொடிகள் ஏதுமில்லாமல் திறவையாக இருப்பது போல் பார்த்துக்கொள்ள வேண்டும். மனையின் மற்ற பகுதிகளை விட இவ்விடத்தை சற்று தாழ்வாக அமைக்க வேண்டும். கிணறு ஆழ்துளைக்கிணறு, நிலத்தடி நீர்த்தொட்டி, மழைநீர் சேமிப்புத் தொட்டி ஆகியவற்றையும் மனையின் இம்மூலையில் அமைக்க வேண்டும்.

மனையின் வாசலை(காப்புச்சுவர் வாசல்) ஈசானிய மூலையில் அமைத்து, மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலுள்ள காப்புச்சுவர்களை விட கிழக்கு மற்றும் வடக்கு திசைகளிலுள்ள காப்புச்சுவர்களை, உயரம் மற்றும் அகலம் குறைவாக இருப்பது போல் அமைக்கவும். ஈசானிய மூலையில் தெருக்குத்து வரும் மனையை தேர்ந்தெடுத்து காப்புச்சுவர் வாசல் மற்றும் தலைவாசல்களை இத்தெருக்குத்துக்கு நேரெதிராக அமைப்பது மிகவும் சிறப்பு.

கட்டடத்தின் ஈசானிய மூலையை சுமார் ஒரு அங்குலம் நீண்டிருப்பது போல் அமைத்தால் போதுமானது. இம்முலையில் போர்டிகோ, சிட்அவுட், தலைவாசல், கோல் என்ற வரிசைப்படி அறைகளை அமைக்க வேண்டும். ஒவ்வொரு அறையின் ஈசானிய மூலையும் எடை ஏதுமின்றி காலியாக இருப்பது அவ சியம். ஒவ்வொரு அறையிலும் எடை மற்றும் உயரம் என்ற அடிப்படையில் தென் மேற்கு மூலையில் அதிக எடை மற்றும் உயரமான பொருட்களையும், அதற்கடுத்து தென் கிழக்கு, வடமேற்கு என எடை மற்றும் உயரும் குறை ந்து கொண்டே வரவேண்டும். அறைகளுக்குரிய வாசல்கள், ஜன்னல்கள் மற்றும் வெண்டிலேட் டர்களை உச்சப் பகுதியில் அமைக்க வேண்டும்.

சுவருக்குள் கூண்டு ஏற்படுத்தி அமைக்கப்படும் கபோர்டு மற்றும் ஷோகேஸ்களை அறையின் தென்கிழக்கு மற்றும் வடமேற்கு மூலைகளில் அமைக்கலாம். வீட்டில் வசிப்போர் அதிக நேரம் கிழக்கு திசை நோக்குவது போல் நாற்காலிகளை அமைக்கவும்.

***ஈசானிய மூலையின் நற்பலன்கள்***

வீடு மற்றும் தொழில் புரியும் கட்டடத்தின் ஈசானிய மூலையை (வடகிழக்கு மூலை) சாஸ்திரப்பட்டி அமைப்பதும். காலியிடத்தின் வடகிழக்கு மூலையை சாஸ்திரப்படி அமைப்பதும், அங்கு வசிப்பவர்களுக்கு பல நற்பலன்களை ஏற்படுத்தும். அகசிவப்பு ஒளிக்கதிர்கள் அதிகம் படும் வடகிழக்கு மூலையில் கிணறு

## ஜோதிடக் களம்

அமைப்பதன் மூலம் இப்பலன்கள் மேலும் அதிகரிக்கும். மேலும் ஈசானிய மூலையில் போர்ட்டிக்கோ, சிட்அவுட், கோல், தலைவாசல் போன்றவற்றை அமைக்கும் பட்சத்தில் இவ்வொளிக்கதிர்களின் நன்மைகள் அனைவருக்கும் எளிதாக சென்றடையும்.


மனையின் சரியான வடகிழக்கு மூலையில் கிணற்றை அமைப்பது மிகவும் அவசியம். வடகிழக்கைத் தவிர ஏனைய மூலைகளில் கிணறு அமைப்பது மிகுந்து தீயபலன்களை அளிக்கக்கூடியது. உதாரணத்திற்கு புறஊதா ஒளிக்கதிர்கள் அதிகம்படும் தென் மேற்கு மூலையில் கிணற்றை அமைத்து அந்த நீரை உபயோகப்படுத்தினால் தோல் புற்றுநோயும், தோல் சம்பந்தமான பல நோய்களும், உடல் நலக்குறைவுகளும் ஏற்படும் என்பது மருத்துவ ரீதியாக கண்டறியப்பட்ட உண்மை, வடமேற்கு மூலையில் கிணற்றை அமைப்பது காரியத் தடங்கல்களையும், தொழில் மற்றும் குடும்பத்தில் சிக்கல்களையும் ஏற்படுத்தும்.தென்கிழ க்கு மூலையில் கிணற்றை அமை ப்பது மன அழுத்தத்தையும், பெண்களிடையே திருட்டு பயம்,வயிறு சம்பந்தமான பிரச்சினைகள், மூட்டுவலி போன்றவற்றையும் ஏற்படுத்தும். கிணற்றை ஈசானிய மூலையில் அமை ப்பது நன்மை களை மேலும் அதி கப்படுத்தும்.

சாஸ்திரப்படி ஈசானிய மூலையை அமைத்து வடகிழக்கு மூலையில் வடக்குபக்கம் வாசலை அமைப்பது அவ் வீட்டில் வசிக் கும் பெண்களுக்கும் வடகிழக்கின் கிழக்கில் வாசலை அமைப்பது அங்கு வசிக்கும் ஆண்களுக்கும் நற்பலன்களை ஏற்படுத்தக்கூடியது. மனை, வீடு மற்றும் தொழில் புரியும் கட்டடத்தின் ஈசானிய மூலை நீண்டிருப்பது வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும். கடினமான செயல்களையும் எளிதில் முடிப்பது, தொழில் மற்றும் பிற முன்னேற்றங்களுக்கு உரிய மேலோங்கிய சிந்தனையும், திட்டங்களையும் செயற்படுத்துவது, சிக்கலான பெரிய காரி யங்களையும் உற்சா கமாய் மேற் கொண்டு விரைவில் முடி ப்பது போன்றவை

***இம்மூலையை சாஸ்திரப்படி அமைப்பதன் நன்மைகள்.***

வீட்டிற்கு அருகாமையில் இடம்வாங்கும் பட்டசத்தில், வீட்டிற்கு வடகிழக்கிலுள்ள இடத்தையும், வடக்கு மற்றும் கிழக்கு திசைகளிலுள்ள இடத்தையும் வாங்கலாம். இவ்வாறு வாங்கும் மனை தற்போது குடியிருக்கும் வீட்டிலிருந்து (அல்லது மனையிலிருந்து) சிறிதளவு கூட மேற்கு மற்றும் தெற்கு திசைகளில் அமைந்துவிடக் கூடாது. புதிதாக மனை அல்லது வீடு வாங்கும் பட்சத்தில் தற்போது குடியிருக்கும் வீட்டிலிருந்து வடகிழக்கு திசையில் வாங்குவது உடனடியாக சில நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். ஒரே கட்டடத்தில் பல குடியிருப்புகள் இருக்கும் பட்டசத்தில் வடகிழக்கிலுள்ள வீட்டை உபயோகிப்பவருக்கே அதிக நற்பலன்கள் உண்டாகும்.

இதேபோல் சொந்த மனையில் ஒரேகட்டடத்திலோ அல்லது தனியாகவோ வாடகைக்கு




விடப்படும் வீடு, தெற்கு அல்லது மேற்கு திசைகளில் வருவது போலும், உரிமையாளர் வடக்கு அல்லது கிழக்கு திசையில் உள்ள பகுதியை திட்டமிட வேண்டும். கொம்ப்ளக்ஸ்களுக்கும், பல குடியிருப்புகளை கொண்ட காலனிகளுக்கும் இது பொருந்தும்.

மனையில் வடகிழக்கில் வடக்கு அல்லது கிழக்கு திசையில் தெருக்குத்து இருப்பது மிகுந்த நற்பலன்களை அளிக்கும். ஈசானிய தெருக்குத்துள்ளமனை மிகுந்த அதிர்ஷ்டத்திற்குரியது. ஈசானியத்தில் தெருக்குத்து, காப்புச்சுவர் வாசல், கிணறு, ஆழ்துளைக்கிணறு, நிலத்தடிநீர்த் தொட்டி, போர்ட்டிக்கோ, சிட் அவுட் கோல், மனையின் ஈசானியத்தில் அதிக காலியிடம் ஒவ்வொரு அறைக்கும் ஈசானியத்தில் ஜன்னல் மற்றும் வாசல்கள் போன்ற அமைப்புக்கள் கொண்ட கட்டடத்தில் குடியிருப்பவர்களும், தொழில் செய்பவர்களும், ஏனையவர்களைக் காட்டிலும் அதிக புத்திசாலியாகவும், அழகுடனும், ஆரோக்கியத்துடனும், விளங்குவார்கள். இவர்கள் தொடங்கும் காரியத்தில் வெற்றியும், இலாபமும் அடைவார்கள்.

# இராஜதந்திரிகளுக்கு எதிராக வெளிநாடுகள் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க முடியாது

## வியன்னா கோட்பாடு இதுவே என்கிறார் சரத் திஸாநாயக்க

வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் அரச பிரதிநிதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாதென அரசாங்கம் குறிப்பிடுகின்றது.

அரச இராஜதந்திர பலனை அனுபவிக்கும் எந்தவொரு நபரும் வெளிநாட்டிலுள்ள எந்தவொரு நிறுவனத்தினாலும் வழக்குத் தாக்கல் செய்ய முடியாதென வெளிவிவகார அமைச்சின் மக்கள் உறவுகள் மற்றும் பொதுத் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் வியன்னா கோட்டபாட்டிற்கு அமைய எந்தவொரு அரச இராஜ தந்திரிக்கும் கிடைக்கும் சிறப்புரிமை இதுவென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக குறித்த கோட்பாட்டிற்கு எதிராக காரணங்களை முன்னிலைப்படுத்தி இலங்கை அரச இராஜதந்திரிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாதென சரத் திஸாநாயக்க தெரிவித்தார்.

அண்மைககாலமாக வெளிநாடுகளில பணிபு[illegible] இலங்கையின் சில சிரேஷ்ட இரா ஜதந்திரி[illegible]கு எதிர[illegible]க சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பி[illegible] ஊட[illegible]மான்றுக்கு தெரிவிக்கையிலேயே வெளி[illegible]வகார அமைச்சின் பொதுத் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் இதனைக் கூறினார்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் ஜேர்மனுக்கான பிரதித் தூதுவர் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் ஆகியோருக்கு எதிராக போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சுமத்தி குறித்த நாடுகளிலுள்ள சில சட்டக் குழுவினர் நடவடிக்கைகளை முன்னெடுக்க முயன்றார்கள். இவ்விதமான குற்றச்சாட்டொன்று அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் அட்மிரல் திஸர சரமசிங்கவுக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் மனித உரிமைகள் அமைப்பு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் திஸர சமரசிங்கவிற்கு எதிராக போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டுமென அவுஸ்திரேலிய அரசாங்கத்தினை வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாக அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அட்மிரல் திஸ்ர சமா[illegible]ங்க சுட்டிக்காட்டினார். (4-2)

# பாரத லக்ஸ்மனின் கொலை குறித்த விசாரணைகள் நிறைவடையும் நிலையில்

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரமேச்சந்திரவின் கொலைச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை இன்னும் சில தினங்களுக்குள் நிறைவு செய்ய எண்ணியுள்ளதாக பொலிஸ் மா அதிபர் என். கே.இலங்கக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் தொடர்பில் குறித்த விசாரணைகளின் பின்னர் மக்களுக்கு விடயங்கள் தெளிவூட்டபடவுள்ளதாக ஊடக மொன்றிற்கு பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக் கொலை சம்பவம் தொடர்பில்சட்டமா அதிபர் திணைக்களம் தலையீடு செய்யமுடியுமா என சட்டமா அதிபர் ஈவா வனசுந்தர தெரிவிக்கையில்,

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை பெற்றுக் கொண்டதன் பின்னரும் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னரும் அதன் சாராம்சத்தை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் முன்வைக்க வேண்டும் என இதற்குப் பதிலளித்த அவர் குறிப்பிட்டார்.


இதற்குப் பின்னரே சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க முடியுமென ஈவா வனசுந்தர மேலும் தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சில துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது.

(4-2)

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 07

## ஆசை

ஆசை, உயிருக்கான அடிப்படையான தன்மை. ஆனால், மக்கள் ஆசையை விட்டுவிட மிகத் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் ஆசை நிறைவேறாவிட்டால், பல துன்பங்கள் நேர்கிறது. உங்கள் வாழ்வின் ஒரே துன்பம், வாழ்க்கை நீங்கள் நினைத்த விதமாக நடக்கவில்லை என்பதுதான். நிறைவேறாத ஆசையால்தான் மனிதனுக்குத் துன்பம் நேர்கிறது. 100 விடயங்கள் ஆசைப்பட்ட விதமாக நடந்து, ஒரு விடயம் உங்கள் ஆசைப்படி நடக்காமல் போனாலும் அது துன்பமாய் இருக்கிறது. எனவே, ஆசையை விட்டுவிட வேண்டுமென்று உங்களுக்குப் போதித்து விட்டார்கள்.



கவனித்துப் பார்த்தால், உங்கள் உயிருக்கு அடிப்படையே ஆசைதான் என்பதை அறவீர்கள். ஆனால், ஆசையை விட்டுவிட வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆசைய விட்டுவிட வேண்டும் என்பதே ஒரு ஆசைதானே? இது எப்போதுமே நிறைவேறாத ஆசை. இந்த உயிர் நடைபெறுவதற்கு அடிப்படையே ஆசைதான். ஒரு நிமிடம் உங்கள் வாயை மூடி, மூக்கையும் அழுத்தி மூடிக் கொண்டால், உங்கள் உடல் மூச்சுக்காக ஏங்குகிறது. ஏனென்றால் உங்கள் உடலுக்கு வாழ வேண்டும் என்று ஆசை. ஏதோ ஒரு குறிப்பிட்ட நிலையில் மட்டும் இது இல்லை. எல்லா நிலையிலும் ஆசை இருக்கிறது. உடல் நிலையிலும் இருக்கிறது. பிரபஞ்ச நிலையிலும் இருக்கிறது. ஒவ்வொரு அணுவிலும் ஆசைதான் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கிறது. ஆனால். நிறைவேறாத ஆசை உருவாக்கிய பாதிப்பால், மக்கள் ஆசையை விட்டுவிட் வேண்டு மென்ற ஒரு ஆசையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆசையை விட்டுவிட்டால் நீங்கள் சாப்பிடவும் முடியாது, வாழவும் முடியாது, எதுவும் செய்ய முடியாது. உங்கள் ஆசை பெரிதாக இருந்தாலும், மிகச் சிறியதாக இருந்தாலும் அது நிறைவேறாமல் போகும்போது நேர்கிற பாதிப்பில் எந்த மாற்றமும் இல்லை.

ஆசை என்பது அடிப்படையான சக்தி. ஆசையின் அடிப்படை, விரிவடைய வேண்டும் என்பதுதான். தற்போது நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் சரி, அதற்கும் மேல் இன்னும் சிறிது வளர வேண்டும் என்ற ஆசை எப்போதுமே இருக்கிறது. அந்த ஆசை நிறைவேறியவுடன் இன்னும் சிறிது வளரவேண்டுமென்ற ஆசை வருகிறது. உங்களுக்குத் தெரிந்த விதத்தில் மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும். விரிவடைய வேண்டும் என்ற ஆர்வம் எப்போதுமே இருக்கின்றது. சிலருக்கு தங்களிடமுள்ள பணத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்று ஆசை. சிலருக்குத் தங்களிடம் உள்ள அதிகாரத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை. சிலருக்கு இன்பங்களை அதிகரித்துக் கொள்ள ஆசை. சிலருக்கு அன்பு, சிலருக்கு அறிவு, இப்படி உங்களுக்கு எது தெரியுமோ அதில் விரிவடைய வேண்டுமென்ற ஆசை எப்போதுமே இருக்கிறது. இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று இந்த விரிவடைதல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இது முழுமை பெறுவதாகத் தெரியவில்லை. அப்படியானால், இந்த ஆசையின் அடிப்டைத் தன்மை எல்லையில்லாமல் போக வேண்டும் என்பதுதான். எல்லையில்லாத தன்மை இந்த உடலோடு அடையாளம் எடுத்தவுடன் ஆசை என்பது பிறந்துவிட்டது. இப்போது அது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆசைதான் ஆன்மீகத்திற்கு அடிப்படை. ஆனால், தற்போது அது விழிப்புணர்வில்லாமல் வெளிப்பட்டிருக்கிறது. எல்லையில்லாமல் விரிவடைய வேண்டும் என்கிற ஆசை, விழிப்புணர்வு இல்லாமல் இப்போது பொருட்தன்மையை நோக்கிப் போய்விட்டது. பொருட்தன்மையில் எல்லையில்லாமல் போக நிச்சயம் வாய்ப்பில்லை. பொருட்தன்மை என்பதே எல்லையோடு இருப்பதுதான். மனிதன் விரும்பாததும் இந்த எல்லையைத்தான்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# பண்டைய இலக்கியமும் ஈழத்தமிழரின் சமகால வாழ்க்கையும்

03

இன்றைய ஈழத்துக் குழந்தைகள் பெரும்பாலும் பெற்றோரில் ஒருவரையே சார்ந்து வாழ்கின்றனர். பெரும்பாலான குழந்தைகளின் தந்தை அல்லது தாய் இறுதி யுத்தத்தில் இறந்தவர்களாகவோ அல்லது தடுப்பு முகாம்களிலோ காலத்தைக் கழிக்கிறார்கள். இத்தகைய குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை எவ்வாறிருக்கும் எனும் கேள்வி மனதில் ஒரு உளைச்சலை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது.

இவ்வாறு அழிந்த சமுதாயம் ஒரு பக்கமும், மற்றொரு பக்கம் மீதமுள்ள எம்மினம் போதை வஸ்துக்களாலும் தீய ஒழுக்கங்களாலும் தம்மைத் தாமே அழித்துக் கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள். வெளிநாட்டு மணமகன் மோகத்தில் எத்தனையோ முதிர் கன்னிகள் வாழ்க்கையின் மதியத்தைத் தாண்டி விட்டார்கள். இதற்கு ஆண்களும் விதிவிலக்கல்ல.

"வாரார் ஆயினும் வரினும் நமக்கு
யாராகியரோ தோழி"

எனும் (குறுந்தொகை) பாடலுக்கு இணங்க சில தலைவியர் "திரைகடல் ஓடித்திரவியம் தேடச்" சென்ற தலைவர்களைத் துறந்து, அவர் தம் நண்பரோடு உறவாடித் திளைப்பது மலிந்து விட்டது. தலைவனின் அருகாமையின்றி குளிர் இரவின் கடும் பனியில் தலைவி எவ்வாறு ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள் என ஔவையின் குறுந் தொகைப்பாடல் மிக அருமையாக விளக்குகிறது.

"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஒரேன் யானும் ஓர் வெற்றி மேலிட்டு
ஆ அ! ஒல்! எனக் கூவு வேன் கொல்?
அலமரல அசைவளி அலைப்ப என்
உயவு நோய் அறியாது துஞ்சம் ஊர்க்கே"

இவ்வாறு பிறந்த மண்ணைத் துறந்து, மணந்த பெண்ணைத் துறந்து, சுற்றத்தையும் நட்பையும் துறந்து உழைக்கச் சென்றவர்கள் இளமையையும் உறக்கத்தையும் விற்று, ஈட்டும் பணம் பெரும்பாலும் விளலுக்கு இறைத்த நீராகிவிடுகிறது.

இவை இப்படியென்றால் காதலியைக் காணாத ஒருவன் தன் நிலையை எவ்வாறு வெளிப்படுத்துகிறான் என்பதை,

"ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கை இல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே"

என்னும் குறுந் தொகைப்பாடல் மூலம் அறியலாம். சூரியன் சுட்டெரிக்கும் மதியப்பொழுதில் ஒரு பாறையின் மேல்வைக்கப்பட்டுள்ள வெண்ணெயை காணும் கையில்லாத ஊமை ஒருவன் அந்த "வெண்ணெய்" வீணாவதை எவ்வாறு தடுக்கமுடியாதோ அவ்வாறே காதலியைக் காணாததால் ஏற்பட்ட ஏக்க உணர்விலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடியாமல் தவிப்பதாய்க் கூறுகிறான்.

இலக்கியக் காதல் பாடல்கள், காதலை உரைப்பதற்காக மட்டும் பாடப்படவில்லை. இவை நம்முன்னோர்கள் நம் வாழ்வில் கற்றறிந்த பாடங்கள். அவர்கள் தம் கருத்துக்களை தெளிவாக நம்முடன் பகிர்ந்து சென்றுள்ளார்கள். இருப்பினும் நாம் அவற்றைக் கற்பதும் இல்லை. தவறிக் கற்றாலும் கடைப்பிடிப்பதும் இல்லை.

"வம்ச விருத்தி" மட்டுமே திருமணத்தின் நோக்கம் அல்ல. "ஒருவனுக்கு ஒருத்தி" என்னும் நெறிபிறழாத வாழ்வைக் கடைப்பிடிப்பதற்காகவே திருமணங்கள் தேவைப்படுகின்றன. பால்ய காலம் முதல் பாடையில் செல்லும்வரை மனிதனுடைய தேவைகள் காலத்திற்குக் காலம் வித்தியாசப்படுகிறதே அன்றி ஒரு போதும் குறைவதேயில்லை. ஆணும் பெண்ணும் ஒருவரோடு ஒருவர் சேர்ந்தும், ஒருவரை ஒருவர் சார்ந்தும் வாழும்படி அமைக்கப்பட்டுள்ள நம் சமூகக் கட்டமைப்பு இருமனம் ஒத்த திருமணத்தை வலியுறுத்துவது. திறன் மிக்க மனிதவளத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், சமூகக் குற்றங்களைக் குறைப்பதற்குமே.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

பெரும் குற்றங்களுக்கும் துஸ்பிரயோகங்களுக்கும் அடிப்படையாக அமைவது, பூர்த்தியாகாத பாலியல் தேவைகளே என்கிறது அண்மைய ஆய்வு ஒன்று. இத்தகைய பாலியல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக முறையற்ற உறவுகளைப் பேணுவதால் கடந்த வருடத்தில் மட்டும் (19 வயதற்கு உட்பட்ட) இலங்கையில் 1300 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு கருக்கலைப்பு நடத்தப்பட்டுள்ளது. இவர்களில் பெரும் பாலானோர் தமது உறவினர்களாலேயே இந்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து, இன்று உறவு முறைகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை அறிந்து கொள்ள முடியவில்லையா?

மன்னார் அமுதன்

(தொடரும்)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்




(அச்சுவினி,பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)

**மற்றவர்களின் பலத்தையும் பலவீனத்தையும் துல்லியமாக எடைபோடும் மேட இராசி நேயர்களே!**

செல்வத்தையும் வெற்றியையும் உங்களுடனேயே தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவீர்கள். பதவிக்காக அதிகம் முயற்சி செய்யாமல் தந்தால் பெற்றுக் கொள்வோம் என்ற குணத்தை பெற்றிருப்பீர்கள். வியாபார நோக்கத்துடன் செயற்படுபவர்களை கண்டால் உங்களுக்கு பிடிக்காது. சுதந்திர பிரியர்களாக இருந்தாலும் அன்புக்கும் பாசத்துக்கும் கட்டுப்படுபவர்களாக இருப்பீர்கள்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெற்று விடுகிறார். அதுமட்டுமல்ல குருவும் வக்ர கதியில் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே, வரவைக் காட்டிலும் செலவு கூடும். வருமானம் வந்த மறு நிமிடமே செலவாகும். கூட்டாளிகளின் மூலமாகவும் செலவாகலாம். வீட்டு பராமரிப்புகளை மேற்கொள்வதன் மூலமும் செலவாகும்.

அதே நேரத்தில் புத, சுக்ர,சூரிய சேர்க்கை சப்தம ஸ்தானத்திலேயே இருப்பதால் புதிய வாய்ப்புகளும் வீடு தேடி வந்து கொண்டே இருக்கும். பொன், பொருள் வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். எதிரிகள் விலகி இனிமை சேர்ப்பர். இராகு-கேதுக்களின் ஆதிக்கம் கொஞ்சம் வலுவாக இருப்பதால் சர்ப்ப சாந்தியை முறைப்படி செய்வதோடு குடும்ப உறுப்பினர்களையும் அனுசரித்து செல்வது நல்லது.

இடம், பூமி வாங்குவதில் இருந்த சிக்கல் அகலும். என்றாலும் உடன்பிறப்புகள் வழியில் சில தடுமாற்றங்களையும் தகராறுகளையும் சந்திக்க நேரிடலாம். சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் அறிந்து இராகு ப்ரீதி செய்தால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

ஆறுக்கு அதிபதி புதன் எட்டாம் இடத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கத் தொடங்குகிறார். இது ஒரு பொன்னான நேரமாகும். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு இணங்க எதிர்பாராத சில நல்ல சம்பவங்களும் நடைபெறப் போகிறது. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். பணப் பற்றாக்குறை அகலும், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

எதிர்வரும் 29 ஆம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரனும் இணைந்து சஞ்சரிக்கப்போகிறார். அப்போது கல்யாண கனவுகள் நனவாக மாறும். கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். பெண் வழி தொல்லைகள் நல்ல முடிவுக்கு வரும். புதிய ஒப்பந்தங்களில் கையெடுத்திட்டு மகிழ்வீர்கள்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி சிம்ம இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். குருவின் பார்வை பலத்தோடும் செவ்வாய் சஞ்சரிப்பதால் குரு மங்கல யோகம் உருவாகும். எனவே, மதிப்பும் மரியாதையும் உயரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும்.

பூமி வாங்குவதில் ஏற்பட்ட இடர்பாடுகள் அகலும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள். கடந்த இரண்டு மாதமாக நடைபெறாத காரியம் இப்பொழுது துரிதமாக நடைபெற தொடங்கும்.

இம்மாதம் முருகப் பெருமான் வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். செவ்வாய் தோறும் வழிபட்டால் சேமிப்பு உயரும்.

இம்மாதம் ஆரோக்கியத்தில் கொஞ்சம் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டிய மாத மாக அமைகிறது. குடும்பத்தில் ஒருவர் மாறி ஒருவருக்கு வைத்திய செலவுகள் ஏற்படலாம். வரவு ஒரு மடங்கு வந்தால் செலவு இரு மடங்காகும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது.

பிள்ளைகளின் கல்யாண முயற்சிகள் மற்றும் தொழில் சம்பந்தமான முயற்சிகள் மாதக் கடைசியில் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். அங்காரக வழிபாடு அல்லல் தீர்க்கும்.




(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள் , ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)

**நட்புக்கு இலக்கணம் ஆனவர்கள் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் இடப இராசி நேயர்களே!**

பணப்புழக்கம் அதிகம் பெற்றவர்கள் நீங்கள். உங்களுடைய பணமாக இல்லாவிட்டாலும் யாருடைய பணமாவது உங்கள் கைகளில் புரளும். வரும் காலத்தை நிர்ணயிக்கும் சக்தி உங்களுக்குள் இருக்கின்றது. மற்றவர்களை வேலை வாங்குவதில் சமத்தர்கள் என்று பெயர் பெற்றவர்கள். எவ்வளவு முறை வீழ்ச்சி வந்தாலும் தஞ்சாவூர் பொம்மை போல மீண்டும் மீண்டும் தலை நிமிர்ந்து நின்று விடுவீர்கள்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்திலேயே விரயாதிபதி செவ்வாய் நீச்சம் பெறுகிறார். அத்தோடு மட்டும் அல்லாமல் அஷ்டமாதிபதி குருவும் வக்ரம் பெறுகிறார். புத, சுக்ர, சூரிய சேர்க்கை ஆறாம் இடத்தில் ஏற்படுகிறது. எனவே இந்த மாதத்தில் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்பட உள்ளது. இடையிடையே தடையாக இருந்தவர்கள் விலகுவர். எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் மதிநுட்ப மிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் மகத்தான பலன் கிடைக்கும்.

ஜென்ம கேது செலவுகளை அதிகப்படுத்தினாலும் தனாதிபதி புதன், இராசிநாதன் சுக்ரனோடு இணைந்து இருப்பதால் பணப்புழக்கத்துக்கு குறைவு இருக்காது. கேட்ட இடத்தில் கேட்ட உதவிகள் கிடைக்கும். சப்தம இராகுவும் சந்திர பலமும் உடன் பிறப்புகள் வழியில் பாசத்தை அதிகரிக்கச் செய்யும். ஒரு சில சமயங்களில் இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று சிந்தித்துக் கொண்டு இருப்பீர்கள்.

உங்கள் இராசிக்கு 2, 5 க்கு அதிபதியான புதன் எதிர்வரும் 25 ஆம் திகதி விருச்சிகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை உங்கள் இராசியிலேயே பதிவதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். தேவைப்பட்ட நேரத்தில் தேவைப்பட்ட தொகை வந்து சேரும் என்பதால் காரியங்களைத் துரிதமாக செயற்படுத்துவீர்கள். கொடி கட்டிப் பறந்த குடும்பச் சிக்கல்கள் அகலும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கலாம் என்ற எண்ணம் கைகூடும்.

சுக்ரன் விருச்சிக இராசியில் எதிர்வரும் 25 திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். தன் வீட்டைத் தானே பார்க்கப் போவதால் இனத்தார் பகை மாறும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் அதிகரிக்கும். அஞ்சல் வழிச் செய்தி ஆச்சரியப்பட வைக்கும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தேக்க நிலை மாறி ஆக்க நிலை உருவாக பெண்வழி ஒத்துழைப்புகளும் உங்களுக்கு கிடைக்கும்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய் விருச்சிக இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 7,12 க்கு அதிபதி 4 இல் சஞ்சரிக்கும் போது பூமி வாங்கும் யோகம் அதிகரிக்கும். பொருளாதார நிலையில் சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான சூழ்நிலை உருவாகும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பயணங்கள் அதிகரிக்கும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும்.

இம்மாதம் நந்தீஸ்வரர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். பிரதோஷம் அன்று வழிபட்டால் பெருமைகள் வந்து சேரும்.

இம்மாதம் சுக்ர பலம் சிறப்பாக இருப்பதால் கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கூட்டு முயற்சிகளை விட்டும் தனித்து இயங்க முற்படுவீர்கள். உத்தியோக அனுகூலம் உண்டு. உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்கள் விலகுவர். மாதத்தின் மையப் பகுதியில் சொத்து வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். பிள்ளைச் செல்வம் துள்ளி விளையாட பரிகாரம் பலன் தரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களால் அதிக நன்மைகள் உருவாகும். படைவீட்டு முருகனை வழிபட்டால் தடைக் கற்கள் அகலும்.

(தொடரும்)

சிவல்புரி சிங்காரம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்க போராட்டம் மீதான தடை நீடிப்பு

(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ள முடியாதவகையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ரஞ்சித் என்.வதுகல நேற்று முன்தினம் பிறப்பித்தார்.

அன்றைய தினம் ஆட்சேபனைகள் இருப்பின் அதனை தாக்கல் செய்யுமாறு நீதிபதி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு உத்தரவிட்டார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த நாடளாவிய ரீதியான பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி நோயாளி பெண்ணொருவர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதனடிப்படையில் குறித்த மனு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நேற்று முன்தினம் வரை போராட்டம் நடத்தப்படக் கூடாது என ஏற்கனவே தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மனு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இடைக்காலத் தடையுத்தரவு நீக்கப்பட்டது.

(எ-9)

## வரவு- செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கும் நகர அபிவிருத்திக்கும் அதிக நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் 2012 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அதிகளவான நிதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பின் கீழும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ செயலாளராக பணியாற்றும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த அமைச்சுக்காக 22 ஆயிரத்து 944 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டுச் சட்ட மூலத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சருக்காக ஆயிரத்து 351 கோடி ரூபாவும் இராணுவத்திற்கு 11 ஆயிரத்து 316 கோடி ரூபாவும் கடற்படைக்கு 3 ஆயிரத்து 369 கோடி ரூபாவும் விமானப் படைக்கு 2 ஆயிரத்து 296 கோடி ரூபாவும் பொலிஸ் திணைக்களத்திற்கு 3 ஆயிரத்து 604 கோடி ரூபாவும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 917 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 10 ஆயிரத்து 357 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி 2012 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை நிதியமைச்சரான ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். (4-2)

## உள்ளூராட்சி தேர்தலில்

# வெற்றிபெற்ற ௯0 வீதமானோர் சொத்து விபரம் சமர்ப்பித்தனர்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்களில் 90 சதவீதமானோர் தமது சொத்துக்களில் நிதி சம்பந்தமான அறிக்கைகளை தம்மிடம் கையளித்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த திஸ்ஸப்பிரிய தெரிவிக்கிறார்.

எமது நிலையத்தின் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்குபற்றிய அவர், தேர்தலில் வெற்றி பெற்ற அனைத்து வேட்பாளரின் அறிக்கைகளும் நாளை வியாழக்கிழமை அளவில் பெற்றுக் கொள்ளப்படும் என்றார்.

1975 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சொத்துக்கள்பற்றிய மறுபரிசீலனைக்கமைய தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களைபிரகடனம்செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (4)

# ருவண்டாவும் இலங்கையும் இராஜதந்திர உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ருவண்டா அரசாங்கத்துடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தும் உடன்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்தியாவில் தலைநகர் டில்லியில் உள்ள ருவண்டா தூதரகத்தின் ஊடாக இரண்டு நாடுகளும் தமது இராஜதந்திர உறவுகளை ஸ்தாபிக்கவுள்ளன.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ருவண்டாவில் இலங்கை தூதரகம் இல்லாத நிலையில் கென்யாவின் நைரேபியில் உள்ள இலங்கை தூதரகம் ருவண்டாவுக்கான பணிகளை மேற்கொள்ள உள்ளது. புதிய உடன்படிக்கையின் மூலம் ருவண்டா மற்றும் இலங்கைக்கு இடையில் அரசியல், பொருளாதார, கலாசாரதுறைகளில் நட்புறவு ஏற்படும் எனவும் இது இரண்டு நாடுகளின் மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் எனவும் அமைச்சு கூறியுள்ளது.

ருவண்டாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி கொள்வதன் மூலம் ஆபிரிக்காவில் உள்ள 54 நாடுகளில் 33 நாடுகளுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திகொண்டுள்ளது. இந்த நாடுகள் அனைத்தும் 118 நாடுகள் அங்கம் வகிக்கும் அணிசேரா அமைப்பில் இடம்பெற்றுள்ளன. (4-2)

# சீன பிரஜையை விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

விசா அனுமதிக்காலம் முடிவடைந்தும் இலங்கையில் தங்கிருந்த பென் சூங் என்ற சீனப் பிரஜையை விடுதலை செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

இந்த சீன பிரஜை இலங்கையில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தில் தன்னை அகதியாக பதிவு செய்து கொண்டுள்ளார். இதன் காரணமாகவே அவரை விடுதலை செய்யுமாறு நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

குடிவரவு குடியல்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சான்றிதழுக்கு அமைய குறித்த சீன பிரஜை கடந்த 31 ஆம் திகதி வரை விசா அனுமதியின்றி இலங்கையில் தங்கியிருந்துள்ளார். இந்த நிலையில் சீன பிரஜை அகதியாக பதிவுசெய்துள்ளதால் அவரை விடுவிப்பதாக நீதிவான் கூறியுள்ளார். (4-2)

# இராணுவ நீதிமன்ற நீதிபதிகள் குறித்த பொன்சேகாவின் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முதலாவது இராணுவ நீதிமன்றத்திற்கான நீதிபதிகள் நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான் சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவை விசாரிப்பதை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் ஒத்திவைத்தது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ரஞ்சித் சில்வா, அனில் முன சிங்க ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வது என நீதியரசர்கள் தீர்மானித்தனர். அன்றைய தினம் மனு சம்பந்தமாக இரண்டு தரப்பினரும் தமது தரப்பு வாதங்களை முன்வைக் குமாறு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

முதலாவது இராணுவ நீதிமன்றம் பக்க சார்பாக நடந்து கொண்டதன்மூலம் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பொன்சேகா தனது மனுவில் கூறியுள்ளார். இதனால் நீதிப திகளின் நியமனத்தை இரத்துச் செய்து முத லாவது இராணுவ நீதிமன்றத்தை கலைக்குமாறு உத்தரவிட வேண்டும் என அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (4-2)

# 2011.10 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1216-இங்கிலாந்தின் ஜோன் மன்னன் இறந்த பின் அவனது ஒன்பது வயது மகன் மூன்றாம் ஹென்றி ஆட்சிக்கு வந்தான்.

★ 1453-பிரெஞ்சு போர்டோ நகரைக் கைப்பற்றியதுடன் நூறாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.

★ 1655-சுவீடனின் காரெல் பத்தாம் குஸ்டாவ் மன்னன் போலந்தின் கிராக்கோவ் நகரைப் பிடித்தான்.

★ 1806-எயிட்டியின் மன்னன் முதலாம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.

★ 1812-பிரான்சின் நெப்போலியன் பொனபார்ட் மொஸ்கோவில் இருந்து பின்வாங்கினான்.

★ 1813-ஜேர்மனியின் லைப்சிக் நகரில் நெப்போலியன் பொனபார்ட் பெரும் தோல்வியடைந்தான். ரைன் கூட்டமைப்பு முடிவுக்கு வந்தது.

★ 1912-லிபியாவின் டிரிபோலி நகரை இத்தாலியப் படைகள் ஒட்டோமான் பேரரசிடம் இருந்து கைப்பற்றின.

★ 1921-லிஸ்பன் நகரில் இடம்பெற்ற புரட்சியை அடுத்து போர்த்துக்கல் பிரதமர் அந்தோனியோ, கிரான்ஜோ உட்படப் பல அரசியல்வாதிகள் கொல்லப்பட்டனர்.

★ 1935-எதியோப்பியாவை இத்தாலி கைப்பற்றியதை அடுத்து நாடுகளின் கூட்டணி இத்தாலி மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.

★ 1943-காசநோய்க்கான Streptomycin என்ற நுண்ம எதிரி மருந்து றட்கஸ் பல்கலைக்கழகத்தில் பிரித்தெடுக்கப்பட்டது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்சில் தரையிறங்கின.

★ 1950-சீன இராணுவம் திபெத்தின் காம்டோ நகரைக் கைப்பற்றியது.

★ 1954-சோ ஓயு மலையின் உச்சி முதன் முறையாக எட்டப்பட்டது.

★ 1960-ஐக்கிய அமெரிக்க நாடுகள் கம்யூனிசக் கியூபா மீது பொருளாதார தடைகளை விதித்தது.

★ 1974-நியூயே நியூசிலாந்திடமிருந்து விடுதலைப் பெற்று சுயாட்சி மண்டலமாகியது.

★ 1976-சிம்பன்சி உலகின் அருகி வரும் மிருக இனமாக அறிவிக்கப்பட்டது.

★ 1983-கிரெனாடாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அதன் பிரதமர் மோரிஸ் பிஷொப் படுகொலை செய்யப்பட்டார்.

★ 1986-மொசாம்பிக் ஜனாதிபதி சமோரா மேச்சல் உட்பட 33 பேர் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டனர்.

★ 1991-வட இத்தாலியில் ஏற்பட்ட 7.0 ரிக்டர் அளவான நிலநடுக்கம் காரணமாக 2 ஆயிரம் பேர் வரை இறந்தனர்.

★ 2001-400 அகதிகளை ஏற்றிச் சென்ற இந்தோனேசியப் படகு கிறிஸ்துமஸ் தீவில் கவிழ்ந்ததில் 353 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2003-திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அன்னை தெரேசாவை முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.

★ 2005-மானிடத்துக்கு எதிராக குற்றங்களுக்காக சதாம் உசேனுக்கு எதிரான வழக்குத் தொடங்கியது.

★ 2009-தமிழ் நாதம், புதினம் ஆகிய ஈழச்சார்பு இணையத்தளங்கள் நிறுத்தப்பட்டன.

**பிறப்புக்கள்**

★ 1910-சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல் விருது பெற்ற இந்திய இயற்பியலாளர் (இ.1995)

★ 1976-கோ. சன், தென்கொரிய விண்வெளி வீரர்


**இறப்பு**

★ 1937-எர்னஸ்ட் ரதர்ஃவோர்டு, நியூசிலாந்து இயற்பியல் அறிஞர் (பி.1871)



★ **2000-ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்,**

# நவீன எண் சோதிடம்



## எதிர்ப்புகள் வரினும் எக்காரியத்திலும் மனத் துணிவோடு செயற்படுவர்

74

## செவ்வாய் பொதுப் பலன்

எண் கணிதத்தில் 9 எண் செவ்வாய் என்று அழைக்கப் படுகின்றது. தைரியம், வீரதீரச் செயல், நாட்டைப் பாதுகாக்கும் இராணுவம்,பொலிஸ் இப்படிப் பல் வேறு துறைகளில் சிறந்து நிற்பது இந்த அதிக்கத்தின் பலனாகும்.

ஒவ்வொரு மாதங்களிலும் வருகின்ற 9,18,27 போன்ற தேதியில் பிறந்த அனைவரும் செவ்வாய் அதிக்கத்தில் பிறந்த வராவர். இவர்கள் உடல் பல மும், மனபலமும் பெற்று விளங் குவர். தான் எடுத்த காரியத்தைச் செவ்வனே செய்து முடிக்கப் போராடி உழைப்பர். எந்த நேரத் திலும் உடல் வருத்தம் பாராது ஓய்வின்றி உழைப்பர்.

போக விடயங்களில் அதிக நாட்டம் கொண்டவராக இருந் தாலும் பிறரை பாதிக்குமாறு நடக்க மனம் கூசுவர். இவர்களில் சிலர் மந்தமானவர்களாகவும் இன்னும் சிலர் மின்னல் வேகத்தில் சிந்தனை செய்பவராகவும் இருக் கின்றனர். முரட்டுக்குணம் படைத்த வர்களாக இருந்தாலும் சில நேரங் களில் தேவையில்லாத விடயங் களில் இறங்கி மாட்டிக் கொள்ளுவர்.

அனைத்து இன்பமான காரியங் களிலும் இவர்கள் மனம் இழுத்துச் செல்லும். ஆடம்பரமான பொருட் களை வாங்கிச் சேர்ப்பதில் நாட்டம் உடையவராக இருப்பர். இயந்தி ரங்கள், வாகனம், கட்டிடங்கள், போன்றவற்றில் ஆர்வம் செலுத்து வர். இயற்கைக் காட்சிகளையும், மலைப்பிரதேசங்களையும், கண்டு இவர்கள் மனம் அமைதி கொள் ளும் இவர்களில் 9 வகையான வர்களைப் பற்றிப் பார்ப்போம்.

## உடல் எண் 9 உயிர் எண் 1

9,18,27 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற உயிர் எண் 1 வருமே யானால் இவர்கள் செவ்வாய், சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த வராவர். இவர்கள் புத்திக்கூர் மையுடனும், சுறுசுறுப்புடனும் நிர்வாகத் திறமையுடனும், பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர்.

எப்பொழுதும் தூய்மையான ஆடையை அணிந்து முகச் செழிப்புடன் இருப்பர். தைரிய மாக எதையும் செய்யத் துணியும்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

இவர்கள் சில நேரங்களில் சிந் திக்காது சில காரியங்களைச் செய்து, பின் வருந்துவர். பெண் களாக இருந்தால் ஆண்களா லும், ஆண்களாக இருந்தால் பெண்களாலும் பொருளாதார முன்னேற்றத்தை அடைகின்றனர்.

ஆனால், பெயர் நன்றாக அமையாவிட்டால் பெண்களால் மன வேதனை அடைவர். தைரிய மாகச் செயற்படும் இவர்களுக்கு ஆரம்ப வாழ்க்கை போராட்ட மாக இருந்தாலும், பின் வாழ்க் கையில் முன்னேற்றம் காண்பர். பல்வேறு சோதனைகளைச் சந்தித்து வந்ததால் அனுபவமிக்க மனிமனாக வாழ்கின்றனர். கல்வி யில் தடை ஏற்பட்ட போதிலும் வாழ்க்கையை வெற்றிகரமாக அமைத்துக் கொள்வர்.

இளமையில் துணிகரமாக தன் மனதில் உதித்ததை எல்லாம் செய்து விடுவர். இவர்கள் மனம் நீர்வீழ்ச்சி, மலைப் பிரதேசங்கள், நீர்த்தேக்கங்கள், கடற்கரை ஓரம் போன்றவைகளைக் கண்டு அமைதி கொள்ளும். எப்பொழுதும் சுதந் திரமாக வாழ ஆசைப்படும் இவர் கள் பிறர் கட்டுப்பாட்டின் கீழ் வாழமாட்டார்கள். அரசியல் ஈடுபாடும், இலக்கிய ஈடுபடும் கொண்ட இவர்கள், தனது கருத் துக்களைப் பேசும் பொழுது காரசாரமாக பேசுவர்.

இன்னும் சிலர் அரசியலில்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

நல்ல நிலையை அடைகின்றனர். இவர்களுக்கு நண்பர்கள் அதிகம் இருப்பதால் செலவும் அதிகம். அதேநேரம் செலவு இல்லாமலே ஒரு காரியத்தைச் செயற்படுத்தவும் முடியும். தன் பிறந்த தேதிக்குப் பொருத்தமான எண்ணில் பெயர் அமைந்து விட்டால் நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், நல்ல ஆரோக் கியம், பெருஞ் செல்வம் ஆகிய வற்றைப் பெற்று வாழ்கின்றனர். பெண்களால் வீண் குழப்பங்களும், கோர்ட் வழக்குகளும் வந்து மனவேதனை அடைவர். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் அமைத்துக் கொள் ளவும்.

சட்டம், சமயம், ஜோதிடம், தத்து வம், மருத்துவம், போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். எதிர்ப்புகள் வந்து விட்டால் தன்னை விடப் பெரியவர்களாக இருந்தாலும், பலம் கூடியவராக இருந்தாலும் கடுமையாக எதிர்ப்பர். "மனிதன் என்று பிறந்து விட்டால் மாய்வ தென்பது உண்மையடா" என்று கூறி எதிலும் துணிந்து செயல்படு வர். இதற்கு ஏற்றாற் போல் பெயரும் நன்றாக அமைந்து விட்டால் நல்ல முன்னேற்றத்துடன் வாழ்வர்.

தன்மனத் திருப்திக்காக செலவு செய்யத் தயங்க மாட்டார்கள். ஆனால், பணம் இல்லாத போது, மனம் உடைந்து இருப்பர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் பிறந்த ஊரைவிட்டுச் சற்று தொலை வில் உள்ள ஊரை நாடி வாழ்க்கை யில் உயர்வடைவர். நண்பர்களுக்கு கஷ்டம் வருகிறபோது முன் நின்று உதவி செய்வர். எப்பொழுதும் எதையாவது சிந்தனை செய்து கொண்டே இருப்பர்.

இயற்கைக் காட்சிகளையும், நீர்வீழ்ச்சிகளையும், தொழிற்கூடங் களையும், கடற்கரை ஓரங்களை யும், கண்டு மனம் அமைதி கொள் ளும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வக்கீல், டாக்டர், இஞ்சினியர், பெரிய தொழில் அதிபர்கள், அரசாங்க உத்தி யோகஸ்தர்களாகவும் காணப் படுகிறார்கள். ஆனால், பெயர் நன்றாக அமையாவிட்டால் மேற் குறிப்பிட்ட நல்ல பலன்கள் குறைந்து கஷ்டங்களையும் போட்டி களையும் சந்திக்க நேரும். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

**தொழில்**

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் உத்தியோகம் செய்பவர் களாகவும், சிலர் தொழில் செய்பவராகவும் இருக்கின்றனர். இவர்கள் செய்ய வேண்டிய தொழில் கான்ட்ராக்ட், ஏஜென் சிஸ், நெருப்புச் சம்பந்தமான தொழில், மெற்றல் சம்பந்தமான தொழில், எழுத்து சம்பந்தமான தொழில் பேப்பர் சம்பந்தமான தொழில் போன்றவற்றால் பொரு ளீட்டுவர்.

**நோய்**

இவர்களுக்கு உஷ்ணம் சம் பந்தமான நோய்களும், முதுகு வலி, கண்ணோய், இரத்த அழுத்தம், இடுப்புவலி, மூட்டு வலி, நரம்புத்தளர்ச்சி, சிறு நீரகக் கோளாறு போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்களுக்கு செவ்வாய், சூரி யன், சுக்கிரன் போன்ற ஆதிக்க மான 27,45,19,37,46,64; 15,24,33 42,51,60,69; 14,23,32, 41,50,59,77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-9,5,1,6

யோகமான தேதிகள்- 5,14,23, 6,15,24,9,18,27,1,10,19,28

யோகமான மோதிரக்கல்- பவளம், மாணிக்கம், கனகபுஸ் பராகம், தங்க புஸ்பராகம், நவரத்தினம்

யோகமான நிறம்- வெளிர் நீலம், மஞ்சள், சிவப்பு

ஆகாத தேதி- 2,11,20,29; 7,16,25

ஆகாத நிறம்- கறுப்பு, பச்சை

* * *

## அதிர்ஷ்டமான கற்களை அணிந்து நற்பலன் பெறலாம்

சந்திரகாந்தக்கல் (Moon stone) வெள்ளை நிறம் கொண்ட இந்தக் கல் நடுவில் வெள்ளை,



ஊதா கோடு ஓடும். இதை அணிவதால், சந்தோசமும், பதவி யும், செல்வ விருத்தியும் கிடைக் கும். 2,7 எண்காரர்களே அணிய வேண்டும். விலை குறைவான வைதான்.

**வைடூரியம் (Cats eye)**

வைடூரியம்பார்ப்பதற்கு பூனைக் கண் போன்று இருப்பதால் Cats eye என்று பெயர் வந்தது. "வேப்பம் பழம் போல் கோத்தர மும் வெள்ளிக் கம்பிபோல் சூத் திரமும்" கொண்ட நல்ல கல்லை அணிந்தால் 2 எண் காரர்களுக்கு நல்ல செல்வாக்கும், குன்றாத அதிர்ஷ்டமும் உண்டு. அத்தோடு தெய்வ பலமும்மிகும். வைடூரி யம் நன்றாக நூல் ஓடக்கூடிய தாக இருக்க வேண்டும். விலை அதிகமானதே.

(தொடரும்)

# வடமாகாணத்தில் கலாசார மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது

## இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் கலாசார மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஏற்பட்டு வருவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம்,மீள்கட்டுமானப் பணிகளுக்கு மத்தியில் இந்த வளர்ச்சி ஏற்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தை புனரமைப்பது தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய உயர்ஸ்தானிகர் மேற்கண்டவறு கூறியுள்ளார்.

இந்தியாவின் மாமல்லபுரத்தில் ஸ்தபதிகளினால் திருக்கேதீஸ்வர ஆலயம் புனரமைக்கப்பட உள்ளது. இது தொடர்பான உடன்படிக்கையை கைச்சாத்திடும் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்துகொண்டார். தனது யோசனைக்கு அமைய இந்திய அரசாங்கம் இந்த பணியை மேற்கொள்ள முன்வந்தமை குறித்தும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்வில் வட மாகாணத்தில் கலாசார மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஏற்பட்டு வருவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார். (4-2)

# சட்டத்துறையின் புதிய திருப்பங்களை மக்களுக்கு தெளிவூட்ட நடவடிக்கை

## நீதியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டத்துறையின் புதிய திருப்பங்களை பொது மக்கள் தெளிவுபடுத்தும் இலவச சட்ட ஆலோசனை அறிவூட்டல்களை வழங்க நிதி அமைச்சின் சட்ட உதவி ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இந்த இலவச உதவிகளை வழங்க சட்ட உதவி ஆணைக்குழு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்படும் இந்த அறிவூட்டல் திட்டம் மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட கிளை இணைப்பாளர் தல்லமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விவாகரத்து, தாபரிப்பு பிணக்குகள், குடும்ப வன்முறை, சிறுவர் மற்றும் முதியோர் உரிமைகள் உட்பபிறப்பு -இறப்பு பதிவுகள் என் பனவும் பொது மக்களுக்கு தெளிவூட்ப்பபட்டது.

இந்த சட்ட உதவி தெளிவூட்டல் நடமாடும் சேவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்தப்படுகின்றமை சட்டத்தின் புதிய திருப் பங்கள் இலகுவாக பொதுமக்கள் அறிந்து கொள்ள வ்சதியாக அமையும் என நீதி அமைச்சு தெரிவிக்கின்றது.

இதேவேளை மாதாந்தம் எண்ணாயிரம் ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் சட்ட உதவி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் காணி, விவாகரத்து, தாபரிப்பு, விபத்து, பணம் கொடுக்கல், வாங்கல் பிணக்குகள் போன்ற விடயங்கள் தொடர்பில் சட்ட உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று ஆணைக்குழு குறிப்பிடுகின்றது. (4-2)

# பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்ய முயன்ற நபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கொரிய மொழிப் பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்ய முயன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட ஐந்து சந்தேக நபர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்பரீட்சையில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி ஆகிய பரீட்சையில் நிலையங்களில் இந்த ஐந்து சந்தேக நபர்களும் வேறு நபர்களுக்காக பரீட்சை எழுத முற்பட்டதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளனர்.

இச்சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்திய கறுவாத்தோட்ட பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணை நடத்தப்பட வேண்டியுள்ளதாகவும் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் கோரினர்.(4-2)

# நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகின்றது

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

நுளம்பு பெருகுவதற்கான சூழலை ஏற்படுத்தும் தாவரங்களை இனங்காண நாடளாவியரீதியில் பரிசோதனையொன்றை ஆரம்பிக்க மருத்து நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நுளம்பு பெருகுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும் நுளம்புகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை என ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் அனில் சமரநாயக்க சுட்டிக்காட்டுகின்றார்.

மருத்துவ ஆய்வு நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பரிசோதனையின் முதற்கட்டமாக நுளம்புகள் பெருகக் கூடியதாவரங்களை இனங்காண்பதற்கு மத்திய மாகாணத்திற்கு குழுவொன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சில தாவரங்கள் நீர் தேங்குவதன் காரணமாக நுளம்புகள் பெருக்கெடுக்கின்றமை பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் இது தொடர்பான பரிசோதனையொன்றை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டதாக விசேட வைத்தியர் அனில் சமரநாயக்க சுட்டிக்காட்டினார்.

இந்தப் பரிசோதனைகளின் ஊடாக இயற்கையாக நுளம்புகள் பெருகும் இடங்களை அவதானித்து அவற்றில் நுளம்புகள் பெருகுவதை தவிர்க்க முடியும் எனவும் வைத்திய ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (4-2)

## பாரதவின் கொலையில் நீதியான விசாரணை தேவை

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பான விசாரணைகளை முறையாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விசாரணைகள் பக்கச்சார்பாக முன்னெடுக்கப்படுமாயின் பொதுமக்களிடையே சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பில் திருப்தியின்மை ஏற்படும் என அதன் கொள்கை வகுப்பு பணிப்பாளர் பசில் பெர்னாந்து குறிப்பிடுகிறார்.

இதன் காரணமாக இந்தக் கொலையின் உண்மையான குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு விசாரணை குழுக்கள் செயற்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டுகின்றார். (4-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சீரகம்/போசன குடாரி

Botanical Name:-Cuminum cyminum
Family-Apiaceae
Engl-Cumin
Sinh-Suduru

இக் குடும்பத்தை சேர்ந்த தாவரங்களில் 200 பேரினங்களும் 2 ஆயிரத்து 900 சிற்றினங்களும் காணப்படும். பருவச் சிறு செடியாகும். இலைகளில் எண்ணெய் சுரப்பி உள்ளதால் நறுமணம் உடையதாக இருக்கின்றது. மென்மையான இலைகள் காணப்படும். தண்டின் கிளைகளின் நுனியில் மஞ்சரி காணப் படும். இருபால் மலர்கள் ஒழுங்கான மலர் ஆரச்சமச்சீர் கீழ்மட்ட சூலகம் (Epigynous) உடைய மலர்கள் மஞ்சள் நிறமாகக் காணப்படும்.

நிலத்தை புல்லிவட்டம் கொண்ட வெடிகனி. இது இரண்டு ஒரு விதையுடைய பகுதிகளாகப் பிரிகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் மெரிகார்ப் (Mericarp)எனப் பெயர்.

இரண்டு மெரிக்கார்ப்புகளும் நீண்ட கார்போஃபோர்(carpophore)என்ற சூலக காம்புடன் இணையப்பெற்று தொங்கிய நிலையிலுள்ளன. கனியின் வெளிப் புறத்தில் உயரப் போக்கில் ஓடும் மேடுகள் காணப்படுகின்றன. மேடுகளுக்கு அடுத்து 5 பள்ளங்கள் உள்ளன. இதில் எண்ணெய் சுரப்பிகள் உள்ளன. குளிரான பிரதேசங்களிலேயே இதன் பரம்பல் கூடுதலாக காணப்படும்.விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம். தாவரவியல் அறிஞர்கள் சீரகத்தின் தாயகம் பெர்ஷியா எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மருத்துவக்குணங்கள்:-

★ சீரகத்தின் சிறப்பான மருத்துவகுணம் உடல் செரிமானத்திற்கு உதவுவதுதான். அதனால் தான் போசனகுடாரி என அழைக்



கப்படுகிறது. அஜீரணம் காரணமாக ஏற்படுகின்ற குறைபாடுகளையும் அகற்றும்.

★ உடல் சூட்டை தணிக்கக்கூடியது. உடலில் சேரும் வாயுக் கோளாறுகளையும் சீர் செய்கிறது.உடல் சருமத்தில் எரிச்சல் தோன்றினாலும் சீரகத்தை அரைத்துப்பூச உடனே தணியும்.

★ சீரகத்தை அரைத்து தேனும் உப்பும் வெண்ணெயும் சேர்த்து ஒன்று கலந்து தேள் கொட்டிய வாயில் அழுத்தமாக கனமாக பூசத் தேள் கொட்டிய விஷம் இறங்கி கடுகடுப்பு நீங்கும்.

கர்ப்பகாலத்தின் தொடக்கத்தில் பெண்களுக்கு ஏற்படும் வாந்திக்கு சீரகத்துடன் எலுமிச்சைச்சாறு சேர்த்துக்கொடுக்க வாந்தி நிற்கும்

★ பிரசவத்திற்கு பின்னர் தாய்க்கு தாய்ப் பால் நன்றாக சுரக்க சீரகமும் மிளகும் சேர்த்து பக்குவம் செய்த இரசத்தை உணவோடு அடிக்கடி சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

★ சீரகத்தை நன்கு இடித்து பொடித்து கண்ணாடிக் குப்பியில் வைத்துக்கொண்டு 14 தொடக்கம் 25 கிராம் வரை தேனில் கலந்து காலை, மாலை கொடுக்க சீதபேதம் அஜீரண பேதி பித்தசம்பந்தமான நோய்கள் தணியும்.

★ எலுமிச்சைச்சாறு, இஞ்சிச்சாறு ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் சீரகத்தை மூழ்கும்படி பலதடவைகள் ஊறவைத்து உலர்த்தி எடுத்து பொடித்து அரித்து வைத்துக்கொள்ளவும். மூலக்கடுப்பு, வயிற்றுவலி, கண்ணெரிச்சல், அஜீரணம் ஆகியவற்றிற்கு ஒரு தேக்கரண்டியளவு எடுத்து தேனில் கலந்து காலை, மாலை கொடுக்க தீரும்.

★ சீரகத்தை கரிசலாங்கண்ணி(கையான் தகரை) சாற்றில் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ளவேண்டும். பின்பு இதனைப் பொடித்து அரித்து வைத்துக்கொள்ளவும். இப்பொடி 100 கிராமிற்கு 50 கிராம் பொடித்த சீனி, 25 கிராம் வேர்க்கொம்புத்தூள் கலந்து வைத்துக் கொள்ளவும். இதில் 4 கிராம் அளவு எடுத்து காலை, மாலை காமாலை உள்ளவர்கள் நோய் தீரும்வரை உட்கொள்ளலாம்.

வயிற்றில் எரிச்சல் இருந்தால் சீரகப் பொடி ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து வெண்ணெய்யுடன் சேர்த்து உட்கொள்ளலாம்.

★ கரும்புச்சாறு 150 மில்லி
இஞ்சிச்சாறு 150 மில்லி
எலுமிச்சம்சாறு150 மில்லி
நாரத்தம்பழச்சாறு 150மில்லி
சீரகப்பொடி 350 கிராம்
கற்கண்டு தூள் 350கிராம்

மேற்குறித்தவற்றின் சாறுகளையும் கற்கண்டுத்தூளையும் கலந்து கரைத்து அடுப்பேற்றி தந்தபாகம் வந்ததும் (நூல் போல் இழுபடும் கம்பிப்பதம்) சீரகப்பொடியை கொட்டிகிளறி இலேகியமான பதத்தில் எடுத்துக் கொள்ளவும். 5 கிராம் அளவு காலை, மாலை பாலில் உட்கொள்ள உடல் சூடு ,வயிற்றுப்புண் வெள்ளைசாய்தல் ஆகிய நீங்கும்.

★ சீரகம் 40 கிராம் எடுத்து ஒரு லீற்றர் நல்லெண்ணெயில் இட்டுக்காய்ச்சி சீரகம் நன்கு முறுகி ஒடியத்தக்க பதம் வந்ததும் இறக்கி ஆறவிட்டு புட்டியிலடைத்து கொள்ளவும். வாரத்தில் இருநாட்கள் தலைக்கு தடவிவர தலை கனமாக இருத்தல் கண் தொடர்பான பிணிகள் நீங்கும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

(தொடரும்)

# கொள்ளையர்கள் தவறவிட்டு சென்ற 30 இலட்சம் ரூபா பணம்

(கொழும்பு)

புத்தளத்திலுள்ள வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட 47 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட கொள்ளையர்கள் அதில் முப்பது இலட்சம் ரூபா பணம் அடங்கிய பொதியைத் தவற விட்டுச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிவருவதாவது, புத்தளம் பேருந்து தரிப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள வங்கி ஒன்றில் ஒருவர் 47 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடுவதற்காக அங்கு சென்றிருந்த போது திடீரென வந்த இனந்தெரியாத நபர்கள் அந்தப் பணத்தைக் கொள்ளையடித்துத் தப்பியோடிய போது அதில் முப்பது இலட்சம் ரூபா பணம் அடங்கிய பொதியை கீழே தவற விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-2)

# பெரும் இட நெருக்கடியில் உள்ள வவுனியா பொது வைத்தியசாலை

(வவுனியா)

வவுனியா-பொதுவைத்தியசாலையில் தற்போது வழமைக்கு மாறாக பெருமளவிலான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாதாந்த சிகிச்சை பெறுவதற்காகவும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் ஆகிய நோய்களுக்காகவும் வவுனியாவைச் சேர்ந்த நோயாளர்களுக்கு மேலதிகமாக மதவாச்சி, கெப்பிட்டிக் கொல்லாவ போன்ற தென் பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களும் வவுனியா வைத்தியசாலைக்கு வரத் தொடங்கியுள்ளதால் வைத்தியசாலையில் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நீரிழிவு, உயர் இரத்த அழுத்த நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்து வில்லைகளில் பதினைந்துக்கும் மேற்பட்ட விதமான மருந்துகள் சில மாதகாலமாக கையிருப்பில் இல்லாமையால் அவற்றை தனியார் கடைகளில் பெற வேண்டியிருப்பதாகவும் நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் வெளிநோயாளர் பிரிவிலும் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் பிரிவிலும் இதே நெருக்கடி நிலை காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (4-2)

# இலங்கையிடமிருந்து 80 அதிவேக படகுகளை பெற இந்தியா ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கையிடமிருந்து 80 அதிவேக படகுகளை இந்தியா கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த படகுகளின் பெறுமதி 61 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையினரின் கரையோரப் பகுதிகளுக்கான பாதுகாப்பினை பலப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே இந்த படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இலங்கையின் சோலார் மெரின் லங்கா நிறுவனத்திடம் இருந்து குறித்த கொள்வனவு செய்யப்படும் அதிவேக படகுகள் சாகர் பிரஹரி பால் கப்பலுடன் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 3 வருடங்களின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த படகுகள் விநியோகிக்கப்படவுள்ளன. (4-2)

# சோமவன்ச குழுவினர் கார்ள்மாக்சின் கொள்கையிலிருந்து விலகியுள்ளனர்

## கார்ள்மாக்சின் சிலையை அகற்றினர் கிளர்ச்சியாளர்கள்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் பெல்வத்தையிலுள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்ட் கொள்கை வகுப்பாளர் கார்ள்மாக்ஸின் உருவச்சிலையை அந்த கட்சியின் கிளர்ச்சியாளர் குழு எடுத்துச் சென்றுள்ளது. கிளர்ச்சிக் குழுவின் பேச்சாளர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

சோமவன்ச குழுவினர் கார்ள்மாக்ஸின் கொள்கைகளில் இருந்து விலகி சென்றுள்ளனர்.

கார்ள்மாக்ஸ் போதித்த சிந்தனைகளை பெலவத்த அலுவலகம் முன்கொண்டு செல்லவில்லை. எனவே, அங்கிருந்த கார்ள்மாக்ஸ் சிலையை அகற்றிவிட்டதாக கிளர்ச்சிக்குழுவின் பேச்சாளர் குறிப்பிட்டார். (4-2)

# தமிழக மீனவர் மீதான தாக்குதல் விடயம் ஒரு பொய்ப்பிரசாரம்

## கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர்களுடன் பிரச்சினைகளை உருவாக்கும் தேவை இல்லை என்று எமது நாட்டின் கடற்படை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் கடற்படை இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்று கடற்படைப் பேச்சாளர் கட்டளைத் தளபதி கோசலவர்ணகுலசூரிய தெரிவிக்கிறார்.

இரு தரப்பினர்களுக்குமிடையில் சச்சரவுகளை உருவாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் பிரசாரத்தில் எந்தவித உண்மையும் இல்லை என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

எமது நாட்டிற்கு அண்மையில் விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் பகைமை இல்லாமல் மீன்பிடித்தல் மற்றும் கடற்பிரதேசங்கள் தொடர்பான பிரச்சினைகள் தீர்வதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக இரு நாடுகளின் அரச பிரதிநிதிகளும் தெளிவான நிலையைக் கொண்டிருப்பதாக கடற்படை கட்டளைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (4)

# தேசிய ஔடதக்கொள்கை தயாரிக்கும் பணி முடிவுற்றது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய ஔடதக் கொள்கை மற்றும் ஔடத மானியங்கள் அதிகார சபையின் சட்டமூலம் என்பவற்றை தயாரிக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

குறித்த சட்டமூலம் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான புதிய சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அடுத்த வரும் தேசிய ஔடத கொள்கை மற்றும் அதனுடன் இணைந்த ஔடத மானியங்கள் அதிகார சபையினை செயற்படுத்துவதற்கு எண்ணியுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இதன்கீழ் வேறுபட்ட விலைகளுக்கு மருந்து வகைகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதுடன் மருந்துப் பொருட்களின் அங்கீகரிக்கப்பட்ட பெயர்களுக்கு அமையவே அவற்றை விற்பனை செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக குறைந்த விலையில் உயர் தரத்திலான மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் நோயாளர்களுக்கு கிடைக்கும் என சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது. (4-2)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் இப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட அத்துளு அம்மன் கோவிலடியில் அமைந்துள்ள குடிநீர் குழாய்க்கிணறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அதற்கு அருகில் உள்ள கிணறு சுத்திகரிக்கப்பட்டு சகல வசதியும் செய்து கொடுக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

நெல்லியடி சந்திக்கு அருகாமையிலுள்ள பழைய சந்தையில் மக்களின் நலன் கருதி சைக்கிள் தரிப்பிடம் திறக்கப்பட்டுள்ளது.


நெல்லியடி பட்டணப் பகுதிகளின் பிரதான வீதிகளுக்கு நெல்லியடி வர்த்தக சங்க அனுசரணையுடன் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. (4-12)

# தீபாவளியை முன்னிட்டு கடைகள் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினத்தை முன்னிட்டு கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளரின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம் எனவும் விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் யாழ்.வர்த்தகர்களை வணிகர் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (4)





வடமாகாண கல்வி வலய கணக்காளர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் யாழ்.கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண பிரதி பிரதம செயலாளர் ஏ.மனோரஞ்சன் உட்பட அருகில் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ரீ.ராஜேந்திரன், வடமாகாண கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் சி.விஸ்ணுகுமார் ஆகியோர் கலந்துரையாடல் நிகழ்த்துவதையும் மற்றும் வலய கல்வித் திணைக்கள கணக்காளர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# அணுமின் நிலையத்தை அடுத்தமாதம் இயக்குவதற்கு நடவடிக்கை

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அடுத்த மாதம் மின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அணுமின் நிலையத்தில் எடுக்கப்பட்டுள்ள விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களிடையே பிரசாரத்தை மேற்கொள்ளுவதற்காக ஒரு நடுநிலையான வல்லுநர் குழு தமிழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என அணுசக்தி குழுவின் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி தெரிவித்துள்ளார்.

நிருபர்களிடம் அவர் கூறியதாவது, கூடங்குளம் அணுமின் நிலையத்தில் கடந்த செப்டெம்பரிலேயே மின் உற்பத்தியை ஆரம்பித்தல் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. போராட்டக்காரர்களின் கோரிக்கையான கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வேண்டும் என்பதை மத்திய அரசால் ஏற்க இயலாது.


அணுமின் நிலைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதால் அதை நடுவில் கைவிட முடியாது. இதை கைவிட்டால் வேறு சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். எரிபொருள் கம்பிகளை அணு உலையில் ஏற்றுவதற்கு மத்திய அரசின் அனுமதியை கோரியுள்ளோம். அனுமதி கிடைத்தவுடன் மேலும் சில பணிகளை ஆரம்பித்து அடுத்த மாதத்தில் மின் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பிரசாரம் செய்ய ஒரு நடுநிலையான வல்லுநர் குழு தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அணுசக்தி குழுவின் விஞ்ஞானிகள் இடம்பெறமாட்டார்கள். பூகம்பம், சுற்றுச் சூழல், மீன்வளத்துறை, அணு உலைகள் தொடர்பான நிபுணர்கள் இடம் பெற்றுள்ளனர். தமிழக அரசு தன் நிபுணர்களையும் போராட்டக் குழு உறுப்பினர்களையும் இந்த வல்லுனர் குழுவில் சேர்த்துக் கொள்ளலாம். மாநில அரசு ஒப்புதல் கொடுத்தபின் இந்த வல்லுநர்குழு கூடங்குளம் அருகில் உள்ள மக்களை சந்திக்க திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக இடிந்தக்கரை கிராமத்தில் இக்குழு தனிக் கவனம் செலுத்தும். இப்போராட்டத்தை சில கிறிஸ்தவ அமைப்புக்கள் வழி நடத்திச் செல்கின்றன. அவர்களிடமும் வல்லுநர் குழு பிரசாரம் செய்ய உள்ளது என பானர்ஜி கூறினார். (4-2)

# மதிப்பீட்டுக்கு நியமிக்கப்பட்ட குழுவுக்கு தெரியாமல் பத்மநாபசாமிகோயில் திறப்பு

(திருவனந்தபுரம்)



கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பிரசித்தி பெற்ற பத்மநாபசாமி கோவில் உள்ளது. இக்கோவிலில் 6 இரகசிய அறை கள் உள்ளன. இங்கு ஏராளமான தங்க, வைர, வைடூரிய நகைகள் இருந்தன. திருடப்பட்டதாக கடந்த 2007 ஆம் ஆண்டு புகார் கூறப்பட்டது. இதையடுத்து கோவில் நகைகளை கணக்கெடுக்க 4 சட்டத்தரணிகள் கொண்டகுழுவை திருவனந்தபுரம் மாவட்ட நீதிமன்றம் நியமித்தது.

இக் குழுவினர் முன்னிலையில்தான் கோவில் நிர்வாகிகள் திருவிழாக்காலங்களில் சி. மற்றும் டிஅறைகளைத்திறந்து சாமிக்கு அணிவிக்கும் நகைகளை எடுக்க வேண்டும் என்று உத்தரவிப்பட்டது.

இதற்கு இடையில் கோவில் நகைகளை மதிப்பிட்டு அதன் விபரத்தை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்ற பத்மநாபசாமி கோவில் நகைகளை மதிப்பீடு செய்ய டில்லி தேசிய அருங்காட்சியக இயக்குநர் அனந்த போஸ் தலைமையில் 5 பர் கொண்ட குழுவை நியமித்தது.

இக்கழுவினர் கோவிலின் ஆறாவது அறையை திறக்க எதிர்ப்பு கிளம்பியது. இதனால் அறை திறப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் ஐப்பசி திருவிழா ஏற்பாடுகள் தொடங்கின.

எதிர்வரும் 25 ஆம் திகதி கோவில் கொடியேற்றம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. திருவிழாவன்று சாமிக்குப் போடும் நகைகள் சி மற்றும் டி அறைகளில் இருந்தன. இவற்றை திறந்து நகைகளை எடுக்க கோவில் அதிகாரிகள் முடிவு செய்தனர். இதை அடுத்து அவர்கள் திருவனந்தபுரம் மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்த உத்தரவின் படி சட்டத்தரணிகள் குழுவுக்கு தகவல் தெரிவித்ததன் பின்னர் அவர்கள் முன்னிலையில் அறையிலிருந்த நகைகளை எடுத்துச்சென்றனர்.

இந்த விபரங்கள் எதுவும் உச்ச நீதிமன்றம் நியமித்த மதிப்பீட்டு குழுவுக்கு தெரிவிக்கப்படவில்லை. இதனை தாமதமாக அறிந்த மதிப்பீட்டுக் குழுவினர் அதிர்ச்சி அடைந்தனர். தங்களுக்கு தெரிவிக்காமல் அறைகளை எப்படித்திறக்கலாம் என்று கேள்வி எழுப்பிய அவர்கள் இதுபற்றி உச்ச நீதிமன்றத்தில் புகார் கொடுக்கவும் முடிவு செய்துள்ளனர். கோவிலில் எதிர்வரும் ஐப்பசி திருவிழா நடக்கும் நேரத்தில் இச் சம்பவம் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தும் என்று தெரிகிறது. (4-2)

# கூடங்குளம் அணுமின் பிரச்சினைக்கு தமிழக அரசு மீது பழி சுமத்துகின்றனர்

## ஜெயலலிதா குற்றச்சாட்டு

(சென்னை)



கூடங்குளம் பிரச்சினையில் தமிழக அரசு மீது பழிசுமத்தும் நோக்கில் மத்திய அரசு செயற்படுவதாக முதல்வர் ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.


இதுகுறித்து அவர் கூறுகையில், கூடங்குளம் மக்களின் அச்சம் நீங்காத வரை அங்கு பணிகளை மத்திய அரசு தொடரக் கூடாது என்று தெரிவித்துள்ளார். கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பணிகளை நிறுத்தி வைக்காததே போராட்டம் மீண்டும் நடைபெறுவதற்கு காரணம் என்றும் தெரிவித்த அவர் மக்களின் பயத்தை போக்குவது மத்திய அரசின் கடமை.

இப்பிரச்சினை தொடர்பாக கூட்டுக்குழு ஒன்று அமைப்பதாக மத்திய அரசு கூறியிருந்தது. ஆனால், இதுவரை எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இவ்விடயத்தில் தமிழக அரசு மீது பழிசுமத்தும் நோக்கில் மத்திய அரசு செயற்படுவதாக குற்றம்சாட்டியுள்ளார். (4-2)

# பாரதச் செய்திகள்

# உள்ளாட்சித் தேர்தலில் அரசு நியாயமாக செயற்படாது

## நம்பிக்கை இழந்துள்ளேன் என்கிறார் கருணாநிதி



உள்ளாட்சி தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக மாநில தேர்தல் ஆணையமும் தமிழக அரசும் நியாயமாக நடக்கும் என்ற நம்பிக்கை தமக்கு இல்லை என்று தி.மு.க தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க தலைவர் கலைஞர்,

உள்ளாட்சி தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக மாநில அரசும் மாநில தேர்தல் ஆணையமும் நியாயமான நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை இல்லை. இதுதொடர்பாக நீதிமன்றத்திலும் மாநில தேர்தல் ஆணையத்திடமும் புகார் தெரிவித்துள்ளோம்.

கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினையில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மத்திய மாநில அரசுகள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கலைஞர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜெயலலிதா தன் மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் மீதான கவனத்தை திசை திருப்புவதற்காகவே காவிரி நதி நீர் பிரச்சினை தொடர்பாக திடீரென அரசிதழில் வெளியிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளரர் என்றும் கலைஞர் கூறினார். (4-2)

# மத்தியரசின் செயற்பாடு மிகவும் மோசமடைந்துள்ளது

## அத்வானி தெரிவிப்பு

(நாக்பூர்)

நான் பார்த்த பிரதமர்களிலேயே மன்மோகன் சிங் தான் மிகவும் பலவீனமானவர் என பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி கூறினார்.


ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இரத யாத்திரை மேற்கொண்டுள்ள பா.ஜ மூத்த தலைவர் அத்வானி மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நேற்று முந்தினம் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியதாவது, நான் பல பிரதமர்களை பார்த்து விட்டேன். நான் பார்த்த பிரதமர்களிலேயே மிகவும் பலவீனமான பிரதமர் மன்மோகன்சிங் தான். இதற்குமுன் குஜ்ரால் சந்திரசேகர், தேவ கவுடா போன்றவர்கள் மிக குறைந்த எம்.பிக்களின் ஆதரவுடன் பிரதமராக இருந்தனர். ஆனாலும் நிர்வாகத்தில் அவர்கள் சிறப்பாக செயற்பட்டனர். மன்மோகன் சிங்கோ டில்லியில் உள்ள ஜன்பாத் 10ஆம் எண் வீட்டிலிருந்து சிக்னல் வந்தால் மட்டுமே செயற்படுகிறார்.

கடந்த 2009 இல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தபின் கறுப்பு பணத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மன்மோகன்சிங் உறுதியளித்தார். ஆனால், எந்த நடவடிக்கையும் அவர் எடுக்கவில்லை. மன்மோகன்சிங் மீது ஒரு காலத்தில் மிகுந்த மரியாதை வைத்திருந்தேன். ஆனால், மத்திய அசின் தற்போதைய செயற்பாடு மிகவும் மோசமாக உள்ளது. இதனால் மன்மோகன்சிங் மீது எனக்கு பரிதாபம் தான் வருகிறது எனப் பேசினார். (4-2)



அ.தி.மு.க கட்சி ஆரம்பித்து 40 ஆவது ஆண்டுஆரம்பித்ததையடுத்து தலைமைக்கழகத்தில் அதன் ஆண்டு மலரை முதல்வர் ஜெயலலிதா வெளியிட எம்.எல்.ஏ வளர்மதி பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

# மரதன் ஓட்டப் போட்டியில் 100 வயது தாத்தா பெரும் சாதனை



நூறு வயதில் மரதன் போட்டியில் ஓடி உலக சாதனை படைத்திருக்கிறார். பஞ்சாப்பில் பிறந்து பிரிட்டனில் குடியுரிமை பெற்றுள்ள பா.ஜ சிங் என்பவர் டொரான்டோவில் கடந்த திங்கட்கிழமை நடந்த 42 கிலோமீற்றர் தூரம் கொண்ட மரதன் போட்டியில் கலந்து கொண்டு அந்தத் தொலைவை 8 மணிநேரம் 11 நிமிடம் 5.9 விநாடிகளில் கடந்து நிறைவு செய்துள்ளார்.

இது இவர் பங்கேற்கும் எட்டாவது மரதன் ஓட்டப்போட்டியாகும். தற்போது நிகழ்த்தியுள்ள இந்தச் சாதனையை கின்னஸுக்கும் பரிந்துரைத்துள்ளார்கள்.

பஞ்சாப் மாநிலத்தை பூர்வீகமாக கொண்ட பா.ஜ. சிங் தன்னுடைய மனைவி, மகன் இறப்புக்கு பின்னர் பிரிட்டனில் குடியேறினார். தனது 81 வயதில் குடும்பத்தை இழந்த அந்த தசாப்த நினைவுகளை மறக்கவே ஓட்டப் பயணத்தை தொடங்கியாக அவர் கூறுகிறார்.

இதில் வியக்கதக்கது பா.ஜ சிங் ஒரு முன்னாள் விவசாயி என்பதே. என் வாழ்வின் இறுதி நாள் மூச்சு நிற்கும் வரை ஓடிக் கொண்டே தான் இருப்பேன் என்றார். இவர் தான் உலகின் வயது முதிர்ந்த முதல் மரதன் வீரர் ஆவார். (4-2)

# அம்பன் வைத்தியசாலையை திறந்து வைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

27 மில்லியன் ரூபா செலவில் புனர மைக்கப்பட்ட அம்பன் பிரதேச வைத்தியசாலை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த கால யுத்தத்தினால் பாதிப்படைந்த இந்த வைத்தியசாலையினை மலேசிய அரசின் நிதியுதவியுடன் மேர்சி மலேசியா என்னும் நிறுவனம் முற்றாக புனரமைத்துக் கொடுத்துள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இந்த வைத்தியசாலையின் புனரமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, வைத்தியர் விடுதி, குடும்பநல உத்தியோகத்தர் விடுதி என்பனவும் எதிர்வரும் 21 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப் படுவதன் மூலம் மருதங்கேணி பிரதேச மக்களின் வைத்திய தேவைகள் இலகுவாக் கப்படவுள்ளது.

இதுவரைகாலமும் இப்பகுதி மக்கள் தமது வைத்திய தேவைகளை பெரும் சிரமத்தின் மத்தியிலேயே நிறைவேற்றி வந்தனர்.

எத்தகைய நோய் ஏற்பட்டாலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கும் கொண்டு செல்ல வேண்டிய நிலைஏற்பட்டது. தற்போது அம்பன்பிரதேசவைத்திய சாலை மீள இயங்க ஆரம்பிப்பதனால் அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படுகின்றது.

அத்தோடு இந்த பிரதேச வைத்தியசாலை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, மலேசிய உயர் ஸ்தானிகர் அஸ்மிசைனுதீன், மேர்சி மலேசியா நிறுவனத்தின் உயரதிகாரி கலாநிதி ஹெங் அய்க் வெங்க், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.இரவீந்திரன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ். ஆர்.யூட், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

## பொருளியல் இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சீமா, கப்ஷன் அறிவுத்தேடல் ஆகியவற்றின் அனுசரணையுடனும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடனும் க.பொ.த(உ/த) 2012 ஆம் 2013 ஆம் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் இலவசக் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மாணவர்களையும் சீருடையுடன் சமுகமளித்து பயன்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றது.

அத்தோடு கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கணேசமூர்த்தி, ரவீந்திரன் ஆகியோர் விரிவுரை நிகழ்த்த இருப்பதாக கம்ஷன் நிறுவனம் அறிவித்துள்ளது. (4)

# வெள்ளைக் கொடி விவகார வழக்கின் தீர்ப்பு நவம்பர் 18 இல்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கின் விசாரணைகளை மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்று முடிவுக்கு கொண்டுவந்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி முற்பகல் 11.30 க்கு அறிவிக்கப்படும் என நீதிபதிகள் நேற்று அறிவித்தனர்.

இன்றுடன் வழக்கு விசாரணை முடிவுக்கு வருவதால் சரத் பொன்சேகாவுக்கு சிறைச்சாலைக்குள் வழங்கவேண்டிய வசதிகளை பெற்றுக்கொடுக்குமாறு அவரது சட்டத்தரணி நலீன் லத்தூவஹெட்டி நீதிமன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கமைய சரத் பொன்சேகாவின் அறைக்கு தொலைக்காட்சி ஒன்றை வழங்குவது, சுடுநீரைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவது மற்றும் அவரது நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் வைத்தியர்களிடம் அழைத்துச் செல்வது தொடர்பில் சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் சட்டத்தரணி வேண்டுகோள் வீடுத்தார். (4-2)

## நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்திற்கு ஜேர்மன் கலாசார மையத்தினால் 3 இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் நாட்டின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிக்கும் வகையில் எழுதப் பெற்ற நூல்களையே இந்த கலாசார மையத்தினர் கையளித்தனர்.

மொத்தமாக 60 நூல்கள் இவர்களினால் யாழ். பொதுநூலக நூலகர் திருமதி இ.கருணாகரன் கலாசார மையத்தின் பிரதிநிதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார். (4-6)

# தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சகல உணவு கையாளும் நிலையங்களில் உணவுடன் தொடர்புடையவர்களுக்கும் அண்மையில் நெருப்புக்காய்ச்சல் தொடர்பான தொற்று நோய் இனம்காணப்பட்டுள்ளது.

இதனால் 9 சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வைத்து (T.A.B Vaccine) தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இத்தடுப்பூசி இன்று கொழும்புத்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு சுவாமியார் வீதி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பாசையூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு பாசையூர் மகப்பேற்று நிலையத்திலும் குருநகர் I, குருநகர்-II பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு குருநகர் மகப்பேற்று நிலையத்திலும் யாழ்நகர்-I பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு நாவலர் வீதி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் வைத்தியசாலை வீதியிலுள்ள ஹோட்டல் லோவ்சியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (4-12)

# முதுகலைமாணி மாணவர்களுக்கு சம்பளத்துடன் கற்கை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி முதுகலைமாணி கற்கை நெறியினை (MEd) மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக செயற்பாடுகள் நடைபெறாதிருந்த காலத்திற்காக மேலதிகமாக நடைபெறும் கற்கை காலங்களுக்கான சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை வழங்குவதற்கு வடமாகாண கல்வியமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல்கள் விரைவில் உரிய ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென உறுதியளித்துள்ளார். முன்னர் இம்மாணவர்களுக்கு பல்கலைக்கழக செயற்பாடுகள் நடைபெறாதிருந்த காலத்திற்காக மேலதிகமாக நடைபெறும் கற்கைக் காலங்களுக்கான சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படமாட்டாதென்றும் சம்பளமற்ற விடுமுறையில் கற்கை நெறியினை தொடர வேண்டுமென்றும் வடமாகாண கல்வி அமைச்சு கற்கை நெறியை தொடரும் ஆசிரியர்களுக்கு அறிவித்திருந்தது.

இது தொடர்பாக அவ்வாசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அதனை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிற்கு அறிவித்ததை தொடர்ந்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (4-12)

# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற கந்தையா நாகேந்திரத்தின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்களின் விடயத்தில் கந்தையா மகள் சாரதாதேவி, 9/2, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

-மனுதார்.

எதிர்

வழ.இல:- தத்துவம் / 01/2011

3. கந்தையா மாணிக்கவாசகர்
49, மானோர் குளோஸ், கிங்ஸ்பெறி, என்.டபிள்யூ 9. 9 எச் டி. இலண்டன் ஐக்கிய ராச்சியம்.
4. கந்தையா செல்வராசா
9/2, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். தற்போது கனடா இருவரும் தமது அற்றோணித் தத்துவக்காரர் பரமேஸ்வரன் மகாலட்சுமி, 149, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் மூலம் தோற்றம்

-எதிர்

மனுதார்கள்

மேற்படி மனுதார் மேற்படி காலஞ்சென்றவருடைய மரண சாதனமற்ற மரணச்சொத்துக்கள் தொடர்பில் அதை நிர்வகிப்பதற்கும், மரண சாதனமற்ற நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கும் இந்நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளாராதலினால், இதில் அக்கறையுள்ள எவரேனும் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி காலை 9.00 மணிக்கு, இம்மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு இதனால் அறிவித்தல் தரப்படுகின்றது.

(25.11.2011)

2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 09ஆம் திகதி

மன்றின் கட்டளைப்படி ஒப்பமிடப்பட்டுள்ளது.
பதிவாளர்
T.SURENDRAN,
Registrar G.R.1
Deputy Fiscal & J.P (All Island)
District Court, Jaffna.

(சி-4760)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2011 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்த எமது மாணவச் செல்வங்களான

1. செல்வன் செல்வச்சந்திரன் சரவணன் -173 புள்ளிகள்
2. செல்வன் குவேந்திரன் கோகுலன் -166 புள்ளிகள்
3. செல்வி பிறேமராசா -கிருஷாந்தினி -157 புள்ளிகள்





100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
செல்வன் ச.மதிசங்கர்-147 புள்ளிகள், செல்வி ஜீ.கஜீந்தினி-143 புள்ளிகள்,
செல்வன் அ.அனித்குமார்-132 புள்ளிகள், செல்வி சி.பிரவீனா-123 புள்ளிகள்
ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.
அதிபர், ஆசிரியர், ஆசிரியர் நலன்புரிச்சங்கம், பாடசாலைச் சமூகம்.

(6626)

கடமையைச் செய்ய துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம். ~ சிம்மன்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பொதுமக்களை அலைக்கழிக்காதீர் அது பெரும் பாவச்செயல்

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பன மக்கள் பணி செய்வதற்கான அமைப்புகள் என்பதை பலர் பல தடவைகள் மறந்து விடுகின்றனர்.

குறிப்பாக அரச பணியாளர்கள் தாம் மக்கள் பணி செய்வதற்காக நியமிக்கப்பட்டவர்கள் என்பதை மறந்து விடுவதை காணமுடிகின்றது.

யாழ்.மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ் அவர்கள் அடிக்கடி கூறுகின்ற ஒரு விடயம் 'நாங்கள் அரச பணியாளர்கள் மக்கள் பணி செய்வதற்காக நியமிக்கப்பட்டவர்கள். மக்களின் பணியை செய்யத்தவறுவோமாயின் நாங்கள் குற்றவாளிகளாவோம்'

அவர் கூறிய விடயத்தின் தாற்பரியத்தை அரச பணியாளர்கள் எந்தளவு தூரம் உணர்ந்து கொண்டார்களோ தெரியவில்லை. ஆனால் அவர் கூறிய கருத்து உண்மையானது.

அரச பணியாளர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை செம்மையாக நிறைவேற்றுவார்களாக இருந்தால் பொதுமக்கள் துன்பப்பட வேண்டிய நிலைமை ஏற்படமாட்டாது.

அரச அலுவலகங்களுக்கு செல்கின்ற மக்களின் தேவைகளை கேட்டறிதல், அவர்களுக்கு உதவுதல், நிலைமையை விளக்குதல், மாற்று வழியைக் கூறுதல் என்பன இங்கு மிகவும் முக்கியமானதாகும்.

எனினும் சாதாரண மக்கள் அரச அலுவலகங்களுக்கு அலைவதைப் பார்க்கும் போது தமிழர்கள் செய்த பாவத்தில் இவைதான் மிகப் பெரிதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

தெரிந்தவர்கள், அறிமுகமானவர்கள், செல்வாக்குடையவர்கள் என்போருக்கு முன்னுரிமை வழங்கி அவர்களின் காரியங்களைச் செய்து கொடுப்பதே தங்கள் கடமையென்று நினைக்கும் அரச பணியாளர்கள் தாராளமாக இருக்கிறார்கள் என்பதை எளிதில் தட்டிவிட முடியாது.

சாதாரண மக்களை அலைக்கழிப்பதென்பது மிகப்பெரிய பாவம். அரச வேதனத்தைப் பெற்றுக் கொண்டு மக்களுக்காக பணி செய்வதிலிருந்து விலகுவதை அரச அதிகாரிகள் எவரும் அனுமதிக்கக் கூடாது.

அதேவேளை பொதுமக்களுடன் உரையாடும் போது. அன்பாகவும், பண்பாகவும் உரையாடக் கற்றுக்கொள்ளுதல் என்பது கட்டாயமானதாகும்.

எதற்கெடுத்தாலும் எஃகிறிப்பாய்தல் என்ற நிலைமையிருந்தால், அரச பணியாளரை மக்கள் எவரும் அணுகமாட்டார்கள்.

இந்தப் பணியாளரும் மக்களுக்கான பணியை சரிவரச்செய்ய முடியாது.


ஆக, பொதுமக்களின் சேவகர்கள் என்ற நினைப்போடு ஒவ்வொரு அரச சேவையாளர்களும் தங்கள் கடமையைச் செய்வதற்கான ஒழுங்குகள் வகுக்கப்படுவதும் பயிற்சிகள் அளிக்கப்படுவதும் மிகவும் அவசியம்.

எமக்குத் தெரிந்ததெல்லாம் சாதாரண மக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்ற நினைப்பு நியாயமற்றது.

அத்தகைய நினைப்பு நியாயமாக இருக்கும் என அரச பணியாளர் யாரேனும் வாதிட்டால்,

அரச சேவையில் இருக்கக் கூடிய தகுதியுள்ளவர் வெளியில் நிற்கிறார். வெளியில் நிற்க வேண்டியவர் கதிரையில் இருக்கிறார் என்றே அதற்குப் பொருள் கூறவேண்டும்.

# இங்கிலாந்தின் பிரபுக்கள் சபையால் கௌரவிக்கப்பட்ட பொறியியலாளர்


கலாநிதி கனகசபை

கௌரவ விஞ்ஞான கலாநிதி மற்றும் கௌரவ பொறியியல், கலாநிதி என்ற மதிப்புக்குரிய பட்டங்கள் பெற்ற கலாநிதி சதாசிவம் கனகசபை அவர்கள் சமீபத்தில் உலகப் பிரபல்யம் உடைய எந்திரவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நிறுவனத்தால் (U.K) பிரத்தியேகப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஐம்பது ஆண்டுகளாக இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பியல் முன்னேற்றத்திற்கு அரும்பணி புரிந்தமையை அங்கீகரித்து இப் பரிசில் வழங்கப்பட்டது.

அத்துடன் பிரித்தானியாவில் உள்ள பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பின்பு உலகப் பிரசித்தி பெற்ற பழைய மாணவர்களுக்கு உரிய இவ்வழைப்பை கலாநிதி கனகசபை பெற்றார்.

ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபையின் உபசாரத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டமை, இவரது உயர் கல்வித் தகைமைகள், நிபுணத்துவ தொழில் சார்ந்த பங்களிப்புகள் ஆகியவற்றுக்கு கிடைத்த கௌரவமாகும்.

கலாநிதி கனகசபை இங்கிலாந்து மற்றும் கனடாவில் பணிபுரிந்த பின் இலங்கையின் மொரட்டுவ பல்கலைக் கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் வருகை விரிவுரையாளராக கடமையாற்றியவர்.

இவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் இலத்திரனியல் பிரிவுக்கு குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பாரத கொலை வழக்கு அடையாள அணிவகுப்பு பிற்போடப்பட்டது!

(கொழும்பு)

கொலைசெய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின்முன்னாள்பாராளுமன்று உறுப்பினரும் தொழிற்சங்கங்கள் தொடர்பான ஜனாதிபதியின் பணிப்பாளருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலையுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் பொலிஸ் கான்ஸ்டபிளை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தும் திட்டத்தை கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிற்போட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு பாதுகாப்பாளராக செயற்பட்ட அநுர துஷார மெல் எனப்படும் மிரி ஹாணை பொலிஸ் நிலைய கான்ஸ் டபிள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதால் அடையாள அணி வகுப்பை பிற்போடுமாறு ரகசியப் பொலிஸார் நீதிமன்றை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் சந்தேக நபரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் அவரை அடையாள அணி வகுப்பிற்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கைதுசெய்யப்பட்ட 8 பேரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து தொடர்ந்தும் விசாரணை நடத்தவுள்ளதாக ரகசியப் பொலிஸார் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் முல்லேரியா சம்பவ தினத்தன்று பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுடனும் அவர் பின்னாலும் சென்றவர்கள் என தகவல் கிடைத்துள்ளதாக இரகசியப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ-8)

# குற்றவாளிகள் அரசியல் செய்ய ஒருபோதும் இடமளிக்கக் கூடாது

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

குடுகாரர்கள், பாதாள உலகக் குழுவினர் உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு அரசியல் செய்ய இடமளிக்கக் கூடாது என ஜாதிக ஹெல உறுமயவின் பிரதான செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அவர்களை அரசியலில் ஈடுபடுத்தினால் ஏற்படும் பாரதூரமான விளைவுக்கு அண்மையில் முல்லேரியாவில் இடம்பெற்ற சம்பவம் நல்லதொரு உதாரணம் என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

1977ஆம் ஆண்டு தொடக்கம் குடுகாரர்கள், கொலையாளிகள், குற்றவாளிகள் நாட்டின் அரசியலுக்குள் பிரவேசித்துள்ளதாகவும் அதுவொன்றும் புதுமையல்ல எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அரசியலுக்கு வருவது பணம், அதிகாரம் மற்றும் ஊடகங்கள் ஊடாக பிரபல்யம் என்பவற்றை பெற்றுக்கொள்ளவே தவிர நாட்டுக்கு சேவை செய்ய அல்ல என அவர் சுட்டிக்காட்டினார்.

இன்று 95 சதவீதமான அரசியல்வாதிகள் கறுப்புப் பணத்தை வீசி அரசியல்செய்கிறார்கள். ஆனால் ஜாதிக ஹெல உறுமயவில் உள்ளவர்கள் அவ்வாறு அரசியலுக்கு வந்தவர்கள் அல்லர்.

குடுகாரர்கள், கொலைகாரர்கள், குற்றவாளிகள், பாதாள உலகக் குழுவினர் அரசியல் செய்வதை தடுக்கும் வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு நாம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கிறோம்.

தேர்தல் சட்டம், விருப்புவாக்குச்சட்டம் என்பவற்றின் ஊடாக நாட்டில் அரசியல் வீழ்ச்சியை கண்டுவருகிறது. விருப்பு வாக்கு முறையை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து 2003ஆம் ஆண்டு தினேஷ் குணவர்த் தன தலைமையில் பாராளுமன்ற குழுவொன்று அமைக்கப்பட்டது. ஆனால் இன்னும் எதுவும் செயற்பாட்டில் இல்லை.

தேர்தல் சட்டம், விருப்பு வாக்கு முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பணம் என்பவற்றை கட்டுப்படுத்த சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

இவ்வாறான சட்டம் இந்தியாவில் தற்போதும் நடைமுறையில் உள்ளதாகவும் அமைசர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார். (எ-8)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி.

முதலில் கீழ்ப்படிவதற்கு கற்றுக் கொள். கட்டளையிடும் பதவி பின்னர் உனக்குத் தானாக வந்து சேரும்.

உன்னால் ஒருவனுக்கு உதவி செய்ய முடியாது. மாறாக சேவை செய்யத்தான் முடியும்.

தைரியமும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர்கள் பலரின் நன்மைக்காக பலரின் சுகத்திற்காக தங்களைத் தியாகம் செய்து தான் ஆக வேண்டும்.

அச்சமே மரணம். அச்சத்திற்கு அப்பால் நீ போக வேண்டும்.

நீ தூய்மை உள்ளவனாக இருந்தால் வலிமை உள்ளவனாக இருந்தால், நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.

சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவது தான் நீ ஆன்மீக வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறி.

# ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் அமெரிக்க படைகள் குவிக்கப்பட்டன

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதிகளில் அமெரிக்கப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான பீரங்கிகள், இராணுவ ஹெலிகொப்டர்கள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தானுக்கும் ஆப்கானுக்கும் இடையிலான அனைத்துப் போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டு எல்லைகள் மூடப்பட்டு விட்டன.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தை ஒட்டி ஏழு பழங்குடியினப் பகுதிகள் உள்ளன. அவற்றில்தான் தெற்கு, வடக்கு வசிரிஸ்தான் பகுதிகள் உள்ளன. பாகிஸ்தான் அரசியலமைப்புப் படி ஏழு பகுதிகளும் பழங்குடியினரால் நிர்வகிக்கப்படும் சுயாட்சிப் பகுதிகள். வடக்கு வசிரிஸ்தானின் தலைநகர் மிரான்ஷா் நகர்.

பாகிஸ்தான், ஆப்கான் எல்லையில் பழங்குடியினப் பகுதிகள் இருப்பதால் தலிபான்கள் மிகச் சுலபமாக பாகிஸ்தானுக்குள் நுழைகின்றனர். ஹக்கானி குழுவின் பதுங்கிடமாக வடக்கு வசிரிஸ்தான் இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றது. வசிரிஸ்தான் அருகிலுள்ள பழங்குடியினப் பகுதிகள் சிலவற்றில் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள், பயங்கரவாதிகளின் முகாம்கள் மீதான குண்டுவீச்சில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்துள்ளன.

இந்நிலையில் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் குண்டு வீச்சை மேலும் அதிகரிப்பதன் மூலம் ஹக்கானி குழுவை ஒழித்துக் கட்ட முடியும் என அமெரிக்கா கூறி வந்தது. ஆனால் பாகிஸ்தான் அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தது.

சமீபத்தில் இரு தரப்புக்கும் ஏற்பட்ட ஹக்கானி குழு தொடர்பான விவகாரத்தில் ஹக்கானி குழு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என பாகிஸ்தான் திட்டவட்டமாகத் தெரிவித்தது.

ஆனால் கடந்த செப்டெம்பர் 29 ஆம் திகதி வோஷிங்டனில் நடந்த தேசிய பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ஒபாமா வடக்கு வசிரிஸ்தானில் தாக்குதல் நடத்துவதன் மூலம் ஹக்கானி குழுவை ஒழித்தே தீர வேண்டும் என உறுதியாகத் தெரிவித்தார். வடக்கு வசிரிஸ்தானில் அமெரிக்கா தன்னிச்சையாகத் தாக்குதல் நடத்துமானால் பாகிஸ்தான் சும்மா இருக்காது என்ற பிரதமர் கிலானியின் எச்சரிக்கையை அமெரிக்கா கண்டுகொள்ளவேயில்லை.


இந்நிலையில் தான் கடந்த 15, 16 ஆம் திகதிகளில் வடக்கு வசிரிஸ்தான் எல்லைப் பகுதி முழுவதும் அமெரிக்கப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. வடக்கு வசிரிஸ்தானின் குலாம் கான் பகுதியைச் சேர்ந்தவர்கள். நேட்டோ விமானங்கள் தங்கள் பகுதி மீது பறப்பதாக தெரிவித்துள்ளனர்.

வடக்கு வசிரிஸ்தான் மற்றும் ஆப்கானின் வசிரிஸ்தான் மற்றும் ஆப்கானின் கோஸ்ட் மாகாணம் இடையிலான அனைத்து போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டு விட்டன. எல்லைச் சாவடிகள் மூடப்பட்டு விட்டன.கோஸ்ட் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் குலாம் கான் பகுதி வீதியில் 900 சரக்கு லொறிகள் தேங்கி நிற்பதாக மிரான்ஷாவில் உள்ள பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர். அங்கு அமெரிக்க இராணுவ வீரர்கள் வீடு வீடாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். எனினும் யாரும் கைது சைய்யப்பட்டதாக தெரியவில்லை.

வடக்கு வசிரிஸ்தான் மக்கள் தங்கள் பகுதிகளில் அமெரிக்க இராணுவம் நுழையக் கூடும் என பீதியில் உள்ளனர். அமெரிக்கப் படைகள் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளதை பாகிஸ்தான் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

கடந்த 2004 ஜுன் 17 ஆம் திகதியில் இஐந்து இதுவரை பழங்குடியினப் பகுதிகள் மற்றும் வசிரிஸ்தானில் மட்டும் 300 முறை அமெரிக்க விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளன. இவற்றில் ஒபாமா ஆட்சியில் மட்டும் 248 தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இதில் இதுவரை மொத்தம் 2 ஆயிரத்து 318 இல் இருந்து 2 ஆயிரத்து 912 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 173 குழந்தைகள் உட்பட 775 அப்பாவி மக்களும் பலியாகியுள்ளனர். ஆயிரத்து 141 முதல் ஆயிரத்து 225 பேர் வரை காயமடைந்துள்ளனர். (4-2)



மெஸிடோனியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள கட்டார் நாட்டு ஷேக் அஹமத் பின் கஹலிபா அல்தானியை (இடது) ஸ்கோப்ஜியில் அந்நாட்டு ஜனாதிபதி ஜார்ஜ் இவானவ் வரவேற்பு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# விமான விபத்தில் எட்டு பேர் மரணம்

(கபோரோன்)

போட்ஸ் வானாவில் 12 பேருடன் சென்ற இலகுரக விமானம் ஒன்று புறப்பட்ட சிறிது நேரத்தில் தீப்பிடித்து வெடித்துச் சிதறியதில் 8 பேர் பலியாயினர்.

பிரான்ஸ், சுவீடன் மற்றும் பிரிட்டனில் இருந்து சுற்றுலா சென்ற 7 பயணிகளும் பிரிட்டிஷ் விமானமோட்டியும் இந்த விபத்தில் பலியானதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் 2 பிரெஞ்சு சுற்றுலாப் பயணிகளும் போட்ஸ் வானாவைச் சேர்ந்த 2 பேரும் உயிர் பிழைத்ததாகவும் அந்த அதிகாரி கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. 3 நாட்கள் கழித்து இது குறித்து அறிவிப்பு வெளியிடுவது ஏன் என்பதற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை என தகவல்கள் தெரிவித்தன. (4-2)




# அமெ-பாக். இடையே நட்புறவு தொடர்கிறது

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவும் பாகிஸ்தானும் நட்பு நாடுகளாகும். கடந்த மே மாதம் பாகிஸ்தான் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த அல்கொய்தா தலைவர் பின்லேடன் அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவில் விரிசல் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க தூதரகம் மற்றும் இராணுவத்தின் மீது நடந்த தாக்குதல்களில் பாகிஸ்தான் உளவுத்துறைக்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. இதனால் உறவில் சிக்கல் உருவானது. இது குறித்து இருநாட்டு அதிகாரிகள் மட்டத்தில் பேசி தீர்க்கப்பட்டு விட்டதாக தெரிகிறது.

அதைத் தொடர்ந்து பாகிஸ்தான்-அமெரிக்கா இடையே மீண்டும் உறவு தொடர்வதாக கூறப்படுகிறது. அமெரிக்க வெளியுறவு மந்திரி ஹிலாரி கிளின்டன் இந்த வார இறுதியில் முஸ்லிம் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அப்போது லிபியாவின் இடைக்கால அரசின் தலைவர்கள் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதிகளை சந்தித்து பேசவுள்ளார்.

இந்த பேச்சின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையேயான நிலைமை முற்றிலும் சரி யாகிவிடும் என பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த வாரமத்தியில் இஸ்லாமாபாத் வரும் ஹிலாரி கிளின்டன் அங்கு ஒரு நாள் தங்குகிறார். (4-2)


# ஆயிரத்து 200 கோடி ரூபா பணத்தை முபாரக்கின் மகன் பதுக்கியுள்ளார்

(கெய்ரோ)

சுவிட்சர்லாந்து வங்கிகளில் ரூஆயிரத்து 200 கோடியை முபராக் மகன்கள் பதுக்கி வைத்துள்ளனர். எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த முபாரக்கின் 30 ஆண்டுகால ஆட்சியை எதிர்த்து கடந்த பெப்ரவரி மாதம் பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். 850 பேர் கொல்லப்பட்டனர்.

18 நாட்கள் போராட்டத்துக்கு பின் முபாரக் ஆட்சி வீழ்ந்தது. தற்போது அங்கு இராணுவ ஆட்சி நடக்கிறது. முபாரக் அவரது மகன்கள் காமல், அலா ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாகவும் இலஞ்ச ஊழலில் ஈடுபட்டு சொத்துக்களை குவித்ததாகவும் இவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மீது இராணுவ நீதிமன்றில் விசாரணை நடந்து வருகிறது. இதற்கிடையே முபாராக்கும் அவரது உறவினர்களும் ஐரோப்பிய நாட்டு வங்கிகளில் வைப்பு செய்து வைத்திருந்த பணம் மற்றும் சொத்துக்கள் முடக்கப்பட்டன.



இந்த நிலையில் முபாரக் மகன்கள் காமல், அலா ஆகியோர் சுவிட்சர்லாந்து வங்கிகளில் ரூஆயிரத்து 200 கோடி பணம் பதுக்கி வைத்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதில் 1000 கோடி அலாவுக்கு சொந்தமானது. இந்த தகவலை நீதிமன்ற விசாரணையின் போது இலஞ்ச ஒழிப்பு துறை தலைவர் அசீம் எல்-கோகரி தெரிவித்தார். மேலும் அவர் கூறும்போது, முபாரக்கின் குடும் பத்தினர் சுவிட்சர்லாந்தில் பதுக்கி வைத்திருந்தரூஆயிரத்து250கோடிசொத்துக்கள்முடக்கப்பட்டு விட்டன என்றும் தெரிவித்தார். (4-2)

# மக்கள் அனுப்பும் 10 கடிதங்களை தினமும் படித்து வருகிறார் ஒபாமா

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மக்கள் அனுப்பும் 10 கடிதங்களை தினமும் படிப்பதை வழக்கமாக வைத்துள்ளார். சில கடிதங்களுக்கு மறக்காமல் பதில் கடிதமும் போடுகிறார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று முதல் கறுப்பின ஜனாதிபதி பதவியேற்றவர் பராக் ஒபாமா. அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கும் தயாராகி வருகிறார்.

நாடு முழுவதும் இருந்து ஜனாபதிக்கு தினமும் ஆயிரக்கணக்கான கடிதங்கள் வரும். மின்னஞ்சலும் வரும். இவற்றை படிப்பதற்கென ஒபாமா தினமும் நேரம் ஒதுங்குகிறார். தினமும் 10 கடிதங்கள் படிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார். முக்கியம் என கருதும் சில கடிதங்களுக்கு தவறாமல் பதிலும் அனுப்புகிறார். சில நேரங்களில் அவர்களுடன் தொலைபேசியில் பேசுகிறார்.

கஷ்டத்தில் இருப்பதாக கடிதம் எழுதிய சிலருக்கு காசோலை அனுப்பி வைத்திருக்கிறார். நேரில் சந்திக்கும் போது கூட மக்கள் தங்கள் கருத்துக்கள், எண்ணங்களை ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொள்ள முடிவதில்லை.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தான் இதற்கு காரணம். கடிதங்கள் மூலமாக மக்களின் எண்ணத்தை ஜனாதிபதி நேரடியாக புரிந்து கொள்ள முடிகிறது என்று அமெரிக்க இதழ்கள் பாராட்டு தெரிவிக்கின்றன. (4-2)

# இலங்கை - பாக். மோதும் முதலாவது டெஸ்ட்
# 197 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை



ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள், ஒரேயொரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் பாகிஸ்தானுடன் மோதவுள்ளது.

இதன்படி இவ்விரு அணிகளும் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதனடிப்படையில் முதல் இன்னிங்ஸில் தன்னுடைய ஆட்டத்தைத் தொடங்கிய இலங்கை அணியின் வீரர்களான தரங்க பரணவிதான மற்றும் லஹிறு திரிமன்னே இணை அரைச்சதத்தைக் கூட எட்டாத நிலையில் 48 ஓட்டங்கள் மட்டும் எடுத்திருந்தபோது 20 ஓட்டங்களை எடுத்திருந்த திரிமன்னேயின் ஆட்டமிழப்பால் பிரிந்தது.

தொடர்ந்தும் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்த இலங்கை அணியின் முன்னணி வீரர்களான சங்கக்கார 2 ஓட்டங்களுடனும் ஜெயவர்த்தன 28 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் டில்சான் 19 ஓட்டங்களுடனும் பொறுப்பற்ற முறையில் வெளியேறினார்கள்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்துகொண்டிருந்தாலும் மறுமுனையில் ஆறாவது வீரராகக் களமிறங்கிய அஞ்சலோ மத்யூஸ் மட்டும் அரைச்சதம் கடந்ததுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்து இலங்கை அணியை 197 ஓட்டங்கள் வரை அழைத்துச் சென்றார். இவர் 52 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதி வீரராகப் பெர்னான்டோ ஆட்டமிழக்க இலங்கை அணி தன்னுடைய முதலாம் இன்னிங்ஸில் 197 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பாகிஸ்தான் தரப்பில் மிகச்சிறப்பாகப் பந்துவீசிய ஜுனைத் கான் 14.1 ஓவர்களில் 38 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். தொடர்ந்து உமர் குல், சயீத் அஜ்மல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

நேற்று தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்ட முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

| டெஸ்ட் போட்டிகள் பாகிஸ்தான் எதிர் இலங்கை |
|---|
| 1-வது டெஸ்ட் போட்டி (ஒக்.18-22) |
| 2-வது டெஸ்ட் போட்டி (ஒக்.26-30) |
| 3-வது டெஸ்ட் போட்டி (நவ.3-7) |
| **ஒருநாள் போட்டிகள் பாகிஸ்தான் எதிர் இலங்கை** |
| 1-வது ஒருநாள் போட்டி (நவ.11) |
| 2-வது ஒருநாள் போட்டி (நவ.14) |
| 3-வது ஒருநாள் போட்டி (நவ.18) |
| 4-வது ஒருநாள் போட்டி (நவ.20) |
| 5-வது ஒருநாள் போட்டி (நவ.23) |
| **ஒரேயொரு இருபது-20 போட்டி** |
| நவம்பர் 25 |

# 3-வது ஒருநாள் போட்டியை வென்று பழி தீர்த்தது பங்களாதேஷ் அணி

(சிட்டகொங்)

பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

முன்னதாக மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலிரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான போட்டி வங்கதேசத்தின் சிட்டகொங்கில் அமைந்துள்ள அஹமது சௌத்ரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் முஸ்பிகுர் ரஹீம் மேற்கிந்தியத் தீவுகள் அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதனடிப்படையில் முதலில் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமற் திணறினார்கள்.

ஆரம்பம் முதலே விக்கெட்டுகளை இழந்துகொண்டிருந்த அவ்வணியில் கீரன் பாவெல் 25 ஓட்டங்களையும் கார்லோஸ் பிராத்வைட் 11 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆனால் மற்றைய வீரர்கள் அனைவரும் ஒற்றை



இலக்க ஓட்டங்களில் வெளியேற 22 ஓவர்களின் முடிவில் உதிரியாகக் கிடைத்த 8 ஓட்டங்கள் உட்பட 61 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து அதிர்ச்சியளித்தார்கள். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பெற்றிருக்கக்கூடிய இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

பங்களாதேஷ் பந்துவீச்சில் ஷகிப் அல் ஹசன் மிகச் சிறப்பாகப் பந்துவீசி 5 ஓவர்களுக்கு 16 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். மேலும் சயிபுல் இஸ்லாம், நாசிர் ஹுசைன் ஆகியோர் 3 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் நஸ்முல் ஹுசைன், சுஹ்ராவடி சுவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

62 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்கோடு களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி இலக்கை எட்டியது.

20 ஓவர் போட்டி போல மிகவேகமாக முடிபடைந்த இந்த 50 ஓவர் போட்டியின் ஆட்டநாயகனாக 4 விக்கெட்டுகளை வீழ்த்திய பங்களாதேஷ் அணியைச் சேர்ந்த ஷகிப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடரை 2:1 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றியது. இந்நிலையிலேயே நேற்றைய மூன்றாவது போட்டியில் பங்களாதேஷ் அணி ஆறுதல் வெற்றி யைப் பெற்றுள்ளது.

# தொடரை வென்றது நியூசி.; சிம்பாவே ஏமாற்றம்

(ஹராரே)

சிம்பாவே அணிக்கு எதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில் நியூசிலாந்து அணி டக்-வேர்த் லூயிஸ் முறைப்படி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. சொந்த மண்ணில் சோபிக்கத் தவறிய சிம்பாவே அணி ஏமாற்றம் அடைந்தது.

சிம்பாவே சென்றுள்ள நியூசிலாந்து அணி இரண்டு போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது-20 தொடரில் பங்கேற்கின்றது. முதற் போட்டியில் வெற்றி கண்ட நியூசிலாந்து அணி 1:0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது போட்டி ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

மழை காரணமாக இப்போட்டி 18 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு பிரண்டன் மக்கலம், மார்ட்டீன் கப்டில் ஜோடி நல்ல ஆரம்பத்தை அளித்தது. சிம்பாவேயின் பந்துவீச்சைப் பதம்பார்த்த பிரண்டன் மக்கலம் 31வது பந்தில் அரைச்சதம் அடித்தார். முதல் விக்கெட்டுக்கு 120 ஓட்டங்கள் சேர்த்தபோது பிரண்டன் மக்கலம் 64 ஓட்டங்களுடன் (6 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் உட்பட) எடுத்து ஆட்டமிழந்தார்.



**கப்டில் அரைச்சதம்**

அடுத்துக் களமிறங்கிய ஜெசி ரைடருடன் இணைந்த மார்ட்டீன் கப்டில் அரைச்சதம் விளாசினார். இரண்டாவது விக்கெட்டுக்கு 52 ஓட்டங்கள் சேர்த்த மார்ட்டீன் கப்டில் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் (8) ஓட்டங்களுக்கு ரன்-அவுட் ஆனார். நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 18 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் குவித்தது. ஜெசி ரைடர் (30) ஆட்டமிழக்காமல் இருந்தார். சிம்பாவே சார்பில் ஜார்விஸ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

**ரெய்லர் ஏமாற்றம்**

டக்-வேர்த் லூயிஸ் முறைப்படி சிம்பாவே அணிக்கு 18 ஓவர்களில் 189 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

கடின இலக்கைத் துரத்திய சிம்பாவே அணிக்கு மசகட்சா (9) மோசமான ஆரம்பத்தை அளித்தார். அடுத்துவந்த பிரண்டன் ரெய்லர் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் இணைந்த சிபாபா, சிகும்புரா ஜோடி அணியைச் சரிவிலிருந்து மீட்டது. மூன்றாவது விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் சேர்த்தபோது சிகும்புரா 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க,

அடுத்துக் களமிறங்கிய கோவன்ட்ரியும் டக்-அவுட் ஆனார். மறுமுனையில் பொறுப்பாக ஆடிய சிபாபா 39 பந்துகளில் 65 ஓட்டங்கள் (5 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் உட்பட) எடுத்து ஆட்டமிழந்தார்.

முடிஸ்வா (22), வாலர் (12) ஆகியோர் ஓரளவு ஆறுதல் அளித்தனர். சிம்பாவே அணி 16.5 ஓவர்களில் 154 ஓட்டங்களை எடுத்துத் தோல்வியடைந்தது.

நியூசிலாந்து சார்பில் பிரஸ்வெல், நாதன் மக்கலம் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஆட்டநாயகன் விருந்து நியூசிலாந்தின் மார்ட்டீன் கப்டிலுக்கு வழங்கப்பட்டது.


உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134



## கொழும்பு மேயர் முஸம்மில்

# கடமையை பொறுப்பேற்க முடியாத நிலை

(கொழும்பு)

கொழும்பு மேயராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஏ.ஜே.எம். முஸம்மில் எதிர்வரும் ஒக்டோபர் 31ஆம் திகதி வரை கடமைகளை பொறுப்பேற்க முடியாது என கொழும்பு மாநகர சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளராக கடமையாற்றும் ஒமர் காமில் எதிர்வரும் ஒக்டோபர் 31ஆம் திகதி வரை பணியாற்றுவார் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலக்க தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகியன புதிய மாநகர சபைகளாக விசேட வர்த்தமானி மூலம் ஸ்தாபிக்கப்பட்டமையினாலேயே இவற்றின் புதிய ஆட்சி காலம் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதியே ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஏனைய 21 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## சமரசிங்க...

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த இலங்கையின் பிரதிநிதிகள் உடனடியாக இலங்கை அரசாங்கத்துக்கு நவநீதம்பிள்ளை அழுததாக செய்தி அனுப்பினர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-8)

## ஜனாதிபதிக்கு....

கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் வெளிநாடுகளில் வாழ்கின்ற அதன் ஆதரவாளர்கள் ஊடாக இந்த முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. (எ-8)

### விளம்பரம்

பிள்ளையார் சிலையொன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு இல AR/547/11 இல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப் பிள்ளையார் சிலையை உரிமைகோருபவர்கள் உரிய அடையாளங்களை காட்டி உரிமைகோருமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

பதிவாளர்,
நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(சி-4764)


அரசாங்க உத்தியோகம் பார்க்க விரும்புகின்றீர்களா?
அப்படியாயின் நீங்கள் கட்டாயமாகப்
போட்டிப்பரீட்சைக்குத் தோற்றவேண்டும்
அப்போட்டிப் பரீட்சை எல்லாவற்றிற்கும் உரிய கட்டாயமான பாடங்களான
பொது உளச்சார்பு, மொழியறிவு
இப்பாடங்கள் அனுபவம் மிக்க இலங்கை நிர்வாக சேவையின் SLAS மூத்த அதிகாரியினால் போதிக்கப்படுகின்றன.
புதிய பிரிவுகள் ஆரம்பம் சனி காலை 11 மணி.
தற்போது அஞ்சல் சேவை, SLAS பரீட்சைகளிற்குரிய வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன
திசைகாட்டி
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0214914527
யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ் இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை
(6628)


## ஜனாதிபதி...

வுள்ளார்.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிரதி அமைச்சர்களான நிரூபமா ராஜபக்ஷ, எம்.எல்.எம். ஹிஸ்புல்லா, விநாயகமூர்த்தி முரளிதரன், பஷீர் சேகுதாவூத், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ரீட்டா ஓ சலிவன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

10 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் இந்த நீர் விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

## கியூபா....

அவர் கூறினார்.

கடந்த வருடம் இதே பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபோது 187 நாடுகள் ஆதரவாக வாக்களித்தும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் எதிராக வாக்களித்தன. இதனால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படவில்லை.

இந்தத் தடையின் மூலம் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்கள் கியூபாவிற்கு உதவ முன்வராமல் உள்ளன. அத்துடன் அமெரிக்காவில் உள்ள வங்கிகள் கியூபாவுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது என கியூபத் தூதுவர் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக அமெரிக்கப் பிரஜைகள் கியூபா செல்வதற்கும் அந்நாட்டு அரசாங்கம் இன்று வரை தடை விதித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

## வாசுதேவ....

கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணையின் போது, வாசுதேவ நாணயக்கார தெரிவித்த கருத்துக்களையடுத்தே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போது, முல்லேரியாப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

## ஜி.எஸ்.பி....

ஜி.எஸ்.பி. திட்டம் நீடிக்கப்படுவதனை வரவேற்பதாக இலங்கை வர்த்தகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இச் சட்டத்தில் ஒபாமா கையொப்பமிட்டால் ஜி.எஸ்.பி. நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கும் அனைத்துப் பொருட் களுக்கும் பூச்சிய சதவீத வரியே விதிக்கப்படும்.

ஜி.எஸ்.பி. திட்டத்தின் கீழ் இலங்கை உட்பட 131 வளர்முக நாடுகளின் பொருட்களை அமெரிக்காவின் தீர்வையற்ற சந்தையில் விற்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-8)

## களநிலைமைகளை...

நோர்வே அரசுடன் நேரடியாக தொடர்புபட்ட அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று இந்த விடயங்கள் குறித்த ஆய்வுப் பணிகளை முன்னெடுத்தது. அந்த அறிக்கை ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நோர்வே சென்றுள்ள இலங்கைக்குழு அந்நாட்டு முக்கியஸ்தர்களுடன் பிரஸ்தாப அறிக்கை தொடர்பில் விரிவாக கலந்துரையாடியுள்ளதாகவும் தெரியவருகிறது.

நோர்வே நாடு உக்கிரமாக போர் நடைபெற்ற நாடுகளில் அமைதியை நிலைநாட்ட மேற்கொண்ட நடவடிக்கைகள் திருப்திகரமாக அமையவில்லை என்றும் குறிப்பாக பலஸ்தீனம், இலங்கை போன்ற நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்த அந்நாடு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறிவிட்டது என்றும் சர்வதேச விமர்சனம் எழுந்துள்ளது.

இந்நிலையில், சர்வதேச ரீதியில் தனக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தை போக்குவதற்கு அமைதியை ஏற்படுத்த இலங்கையில் யுத்த காலத்தில் தான் முன்னெடுத்த நடவடிக்கையை மீளாய்வு செய்வதற்கு நோர்வே அரசு தீர்மானித்தது. இதற்கான பணிகளை அரசுடன் நேரடித் தொடர்புடைய தொண்டர் நிறுவனம் ஒன்றிடம் அரசு ஒப்படைத்தது.

இதற்கிணங்க பல்வேறு கோணங்களில் பல மாதகாலமாக ஆய்வுகளை முன்னெடுத்த குறித்த அரசசார்பற்ற நிறுவனம் ஆய்வறிக்கையை அந்நாட்டு அரசிடம் கையளித்துள்ளது.

இந்த அறிக்கையில் இலங்கை, பலஸ்தீனம் ஆகிய நாடுகளின் விவகாரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்றும், யுத்த காலத்தில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே அரசு முன்னெடுத்த நடவடிக்கைகளும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன என்றும் அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசுக்கு சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து காணப்படும் இந்த காலகட்டத்தில் நோர்வே வெளியிடவுள்ள இந்த அறிக்கையானது மேலும் பல வழிகளில் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு மூவரடங்கிய நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தார். அந்தக் குழுவும் பல்வேறு தரப்பினர்களிடம் சாட்சிகளைத் தயாரித்து இறுதிக்கட்ட யுத்தத்தில் நடைபெற்ற அவலங்களை அறிக்கையாக வடிவமைத்தது.

ஐ.நா. செயலாளரிடம் கையளிக்கப்பட்ட இந்த நிபுணர் குழுவின் அறிக்கை ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. குறித்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்ட நாள் முதல் இன்று வரை அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்கத்தேய நாடுகள் ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ள சிபார்சுகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது அரச படையால் இழைக்கப்பட்டதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை அவசியம் என்றும் வலியுறுத்தி வருகின்றன. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, சர்வதேச மன்னிப்பு சபையின் அறிக்கை, சனல் 4 வீடியோ என்பன இலங்கை அரசுக்கு பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ள நிலையில், நோர்வே வெளியிடவுள்ள அறிக்கையானது மேலும் பல நெருக்கடிகளை இலங்கை அரசுக்கு கொடுக்கும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச-8)

## அமைச்சர்....

இலங்கையின் சுகாதார சேவைகள் குறித்து விளக்கமளிக்கவுள்ளார். (ச-5)

## லண்டன் தமிழர்...

ஆண்டு காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சில தடவைகள் லியம் பொக்ஸை சந்தித்தோம்.

இச்சந்திப்புகளின் போது இலங்கையில் இடம்பெற்று வருகின்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நாங்கள் லியம் பொக்ஸுக்கு எடுத்து விளக்க எதிர்பார்த்திருந்தோம்.

2009-ம் ஆண்டு இலங்கையில் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த இறுதிக் காலங்களில் இவர்கள் இறுதியாக லியம் பொக்ஸை சந்தித்துள்ளனர். அப்போது அவர் பிரித்தானியாவின் நிழல் பாதுகாப்பு அமைச்சராக இருந்துள்ளார்.

இச்சந்திப்பின் போது லியம் பொக்ஸின் நண்பரான அடம் வெரிட்டியும் இருந்ததாகவும், அவரும் தங்களுடைய கலந்துரையாடல்களில் பங்கெடுத்துக் கொண்டதாகவும் கலாநிதி ரோஜர் சிறிவாசன் தெரிவித்துள்ளார்

அதேவேளை இலங்கையில் கடற்கரையை நோக்கியபடி அழகான வீடொன்றை வாங்குவதிலும் லியம் பொக்ஸ் ஈடுபாடு கொண்டிருந்ததாக கலாநிதி ரோஜர் சிறிவாசன் தெரிவித்தார் என பிபிசி சிங்கள செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

லியம் பொக்ஸ் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது தனது அதிகாரங்களுக்கான வரையறைகளை மீறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)


மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல்
Washing Machine, T.V, Radio, Hi Fi Set up, Fan, Rice Cooker, Fridge மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயரிங் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0778000748
(6634)



அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்
MOBILE NET MCS COMPUTER SERVICES
CIMA-UK நிறுவனத்தின் Approved Listed College
CIMA-UK
Batch i : Sat 7.30-2PM
Batch ii : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 8.30AM-2PM

Qualified Lectures panel
CIMA Passing Guarantee
12 Years Experience
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
MCS
பதிவுகளுக்கும் 21.10.2011 க்கு முன் நேரில்
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
Full Course fee Free All Computer Diploma courses, IELTS & Diploma in Business English, TOEFL
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
SMS Your name & Course to 772395895 & Get Schol.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.